விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 15 வெள்ளிக்கிழமை (29.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 041

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# பொறுப்புக்கூறல் தொடர்பில்

# அரசின் ஆர்வம் கேள்விக்குறி!

## 144 பொது அமைப்புக்கள் கூட்டாக கண்டனம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் தொடர்பில் முன்னுக்கு பின்னான தகவல்களை வெளியிட்டு வரும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்துக்கு தமிழ் சிவில் சமூக அமையம் உட்பட வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த 144 சிங்கள, தமிழ், முஸ்லிம் பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

## சிக்கா வைரஸ் பரிசோதனை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும்பயணிகள சிக்கா (Zika) வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளார்களா என்பது தொடர்பில் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள. கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் இதுவரை நாட்

24ஆம் பக்கம் பார்க்க....

## உள்.நீதிபதிகளே விசாரணை செய்வர்



(கொழும்பு)

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்காக வெளி

23ஆம் பக்கம் பார்க்க....

## நிசாந்த விக்கிரமசிங்க ஆணைக்குழு முன் ஆஜர்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் நிசாந்த விக்கிரமசிங்க பாரிய நிதிமோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம்குறித்த ஜனாதிபதி ஆணை

23ஆம் பக்கம் பார்க்க....

## நான் இல்லாவிட்டால் போர் இன்றும் நடந்து கொண்டிருக்கும்

### புதிய தலைமை தேவை என்கிறார் கோத்தா

(கொழும்பு)

நான் இல்லை எனில் யுத்தம் இன்றும் நடந்து கொண்டிருக்கும். எனக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் இடம்பெற்ற முறுத்தெட்டுவே ஆனந்த தேரரின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஏற்பாடு செய

23ஆம் பக்கம் பார்க்க....



## நீதிமன்றில் குழப்பம் மூவர் கைதாகினர்

(கொழும்பு)

ஹோமாகம நீதவான் நீதிமன்றத்திற்குள் நுழைந்து குழப்பம் விளைவித்த சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் போது. பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், நீதிமன்றத்திற்குள் வந்து. நீதி

23ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திர தினத்தை பகிஷ்கரிப்போம்

### காணாமல்போனோரின் உறவுகள் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறும் இலங்கையின் சுதந்திர தினத்தை பகிஷ்கரிப்போம் என வடமாகாண காணாமல் போனோரை தேடும் உறவினர்கள் அமைப்பு நேற்று தீர்மானம் எடுத்துள்ளது.

அத்தோடு காணாமல் போனோர தொடர்பில் பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சரின் கருத்துக்களையும் வன்மையாக கண்டிப்பதாகவும இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம்.கிளிநொச்சி, வவுனியா.மன்னார். முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல்போன உறவினர்களின அமைப்பு மற்றும் மன்னார் பிரஜைகள் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## டின்மீனுக்கு வரி விலக்கு

(கொழும்பு)

டின்மீன் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரி விலக்கினை தேசிய டின்மீன் உற்பத்திக்கு மாத்திரம்வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவை பத்

23ஆம் பக்கம் பார்க்க....

## இரண்டு கட்டமான நிகழ்வுகளுடன்

## 68-வது சுதந்திரதின வைபவம் காலி முகத்திடலில் ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை சுதந்திர தினத்தின் 68-வது தேசிய நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி 4-ம் திகதி காலி முகத்திடலில் நடைபெறவுள்ளது.

வழமைக்கு மாறாக இம்முறை இரண்டு கட்டங்களாக தேசிய தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

காலையில் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் அணிவகுப்பு நிகழ்வுகளும், மாலை கலாசார நிகழ்வுகளும் நடைபெறவிருப்பதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா ஆணையாளரை எதிர்க்க அணி திரளுங்கள்!

### அழைப்பு விடுக்கிறார் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஒன்றிணைய வேண்டும்என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளு

23ஆம் பக்கம் பார்க்க....



## துப்பாக்கியை வைத்து மிரட்டினாலும் ஞானசார தேரருக்கு பிணை இல்லை!

### ஹோமாகம நீதிபதி காட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)

எனது தலையில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டினாலும் ஞானசார தேரருக்கு பிணை வழங்க முடியாது என்று ஹோமாகம நீதிபதி காட்டமாக தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்புக்குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு பிணை கோரி மனுவொன்று நேற்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் போதிய விளக்கங்கள் இன்றி பிணை மனு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்து ஹோமாகம மாஜிஸ்திரேட் நீதிபதி ரங்க திசாநாயக்க அதனை நிராகரித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள நீதிபதி. எனது தலையில்

23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுகூர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந் திருந்த இந்நினைவு நிகழ்வு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தலைமையில் கொக்கொடிச்சோலை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான என்.ஸ்ரீநேசன் எஸ்வியாழேந்திரன்சியோகேஸ்வரன். என்.ஸ்ரீதரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இறந்தவர்களின் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டதுடன் உறவினர்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் பணியாற்றிக் கொண்டிருந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள்அசம்பாவித சம்பவத்தின்போது படுகொலை செய் யப்பட்டிருந்தனர்.

மண்முனைத்துறைக்கும் மகிழடித்தீவுக்கும் இடையில் அமைந்திருந்த இறால் பண்ணையில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இச்சம்பவத்தை மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு உமாகரன்



நயினாதீவு 3-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சிவராசா அவனியு திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட **சிவசம்பு-உமாகரன்** அவர்கள் 27.01.2016 புதன் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலம் சென்ற சிவசம்பு- வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் Dr.திருநாவுக்கரசு-பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், செம்மனச்செல்வி (ஆசிரியை- யா/இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், தங்கீர்த்தனன், மேனாளனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

3-ம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல் :
குடும்பத்தினர்.
தொடர்பு : 0776736833

(3426)

## திருமதி முருகேசு நல்லம்மா



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.121, D.10. உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது இல. 54/1, திருவையாறு, கிளிநொச்சியில் வாழ்ந்து வந்தவருமாகிய திருமதி முருகேசு நல்லம்மா அவர்கள் 27.01.2016 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான விசுவலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலம்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலம் சென்ற ஐயம்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும் பூரணம், மனோன்மணி (ஓய்வுபெற்ற பிரதம தாதி), இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்), குலசிங்கம் (முன்னாள் ப.நோ. கூ.சங்க லிகிதர்), தனபாலசிங்கம் (கனடா), தர்மபாலன் (கனடா), இன்பநாதன் (கனடா), பத்மநாதன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலம்சென்ற பசுபதிப்பிள்ளை மற்றும் தம்பிஜயா (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), வசந்தகோகிலம், காலம் சென்ற ஞானசௌந்தரி மற்றும் குலநாயகி, மீனாம்பிகை (கனடா), யோகராணி (கனடா), திருக்கலாதேவி (கனடா), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்றவர்களான ஆறுமுகம், சிவக்கொழுந்து, சின்னத்துரை, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலம்சென்றவர்களான சிவபாக்கியம், கந்தையா, இளையதம்பி ஆகியோரின் மைத்துனியும், தேவறஞ்சிதா, கனகறஞ்சிதா, தெய்வேந்திரன், செல்வறஞ்சிதா, லோகறஞ்சிதா, யோகேந்திரன், சுரேந்திரன், குமணன், நிமலினி, எழிலினி, லோஜினி, கபிலன், தயன், ஜசீலன், சசிபரன், ஜெயந்தன், சத்தியன், ஜனகன், நயனன், சுவர்ணன், ருதுசா, சாகித்தியா, கவிர்ணன், சுபோதன், சுபேதன், சுபாங்கன், இலக்கியன், சங்கீர்த்தன், மாதங்கி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலம்சென்ற நிரோசா மற்றும் உஜிதா, கோசலை, லொசானி, டயானி, தருணிகா, தருணிகன், கோபிகன், பிருந்தன், பிரணவன், வைஸ்ணவி, பிரதீஸ், யாமளன், சைதன்யன், அமரர் சௌஜன்யன் மற்றும் சின்மயன், அனந்தினி, வர்சன், தமிழவி, அகரன், யதுமினன், அக்சதா, ஜனோதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.54/1, திருவையாறு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
இராமச்சந்திரன் (இலங்கை) - 0772556004
தம்பிஜயா மனோன்மணி (இலங்கை) - 0776166080
பூரணம் (இலங்கை) - 0772644017
குலசிங்கம் (ஆனந்தநகர், கிளிசொச்சி) - 0766860254

தகவல் :
குடும்பத்தினர்

# பெண் மீது துஷ்பிரயோகம்; இராணுவ சிப்பாய் கைது!

(கொழும்பு)

வேலைக்குச் சென்று வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணொருவரை, மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டதாக கூறப்படும், இராணுவ புலனாய்வுப் பிரிவு சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நவகத்தேகம - மீவெல்லாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் என்பதோடு, கரன்தெனிய சன்னத்ய புலனாய்வு பிரிவில் பணிபுரியும் இராணுவ சிப்பாய் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த 26-ம் திகதி மாலை 06.30 அளவில் நவகத்தேகம நகரில் வைத்து சந்தேகநபர் தன்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முற்பட்டதாக, மீவெல்லாவ பகுதியைச் சேர்ந்த 26 வயதான பெண்ணொருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து குறித்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக வசாரணைகளை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# மோ.சைக்கிள்கள் விபத்தில் குடும்ப பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.



இச்சம்பவம் நேற்று இரவு 6.40 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று பலாலி வீதியில் இருந்து பிரிந்து செல்லும் ஒழுங்கை ஒன்றுக்குள் திரும்பிய வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளில் குடும்பப் பெண் ஒருவரும் மற்றைய மோட்டார் சைக்கிளில் இளைஞர் ஒருவரும் பயணித்த நிலையில் குறித்த பெண்ணே விபத்தில் படுகாயமடைந்துள்ளார். உடனடியாக குறித்த பெண் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்பப் பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்திற்கு உள்ளாகிய நிலையில் விபத்தில் சிக்கிய இளைஞருக்கும் அவருடைய மோட்டார் சைக்கிளுக்கும் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# சிறுநீரக மோசடி அறிக்கை இன்று

(கொழும்பு)

சிறுநீரக மோசடியில் இலங்கை வைத்தியர்கள் அறுவர் தொடர்புபட்டிருப்பதாக, இந்தியப் பொலிஸார் வெளியிட்ட தகவல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவின் அறிக்கை, இன்று தன்னிடம் கையளிககப்படலாம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரி வித்துள்ளார்.

அந்தக் குழு நியமிக்கப்பட்ட தினம் தொடங்கி மூன்று நாட்களுக்குள் சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என், முன்னதாக உத்தர விடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)




# யாழ்ப்பாணத் தாயின் அவலம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில்!

(யாழ்ப்பாணம்)

**16 வயதேயான தனது மகளை இராணுவச் சீருடை அணிந்தவர்கள் கடத்திச் சென்றது எவ்வாறு என யாழ்ப்பாணத் தாய் ஒருவர் கண்ணீருடன் விபரித்ததை ஐ.நாவுககான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் முறைசாராக் கூட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.**

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முறைசாரா கூட்டத்தில் இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பான விவகாரம் குறித்துப் பேசப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக பொறுப்புக் கூறலின் பூகோள சவால்கள் தொடர்பாக, ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முறைசாரா கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதன்போது. ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், இலங்கைக்கான தனது பயணம் குறித்தும் இலங்கையில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாகவும் எடுத்துக் கூறினார்.

பெருமளவில் காணாமற்போதல்களால் பாதிக்கப்பட்ட இரண்டு நாடுகளான இலங்கைக்கும், மெக்சிகோவுக்கும் தாம் அண்மைய மாதங்களில் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததாக சமந்தா பவர் தெரிவித்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தாய் ஒருவரை சந்தித்த போது, 2009 மார்ச் மாதம் 16 வயதுடைய தனது மகள் இராணுவ சீருடையணிந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டது எவ்வாறு என்று விபரித்திருந்தார்.


அந்தத்தாய் தடுக்கச் சென்ற போது தாக்கப்பட்டார். அதற் குப் பின்னர் அவரது மகள் திரும்பி வரவில்லை. கடந்த ஆறு ஆண்டுகளாக அவர் ஒவ்வொரு நாளையும் அவர் தனது மகளைத் தேடுவதி லேயே செலவிட்டுக் கொண் டிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு, அவர்களின் உறவுகள் காணாமற்போனது தொடர்பான சான்றிதழை வழங்க வழி செய்யும் சட்டத்தை மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருப்பதாகவும் சமந்தா பவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை, மெக்சிகோ போன்ற நாடுகளில்இது போன்ற நடவடிக்கைகள் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கூரிய ஆயுதங்களுடன் நள்ளிரவுவேளை வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள்

## 3 லட்சம் ரூபா பணம்; 35 பவுண் நகை சூறை



(யாழ்ப்பாணம்)

வீட்டின் ஜன்னல் கம்பிகளை வளைத்து உள் நுழைந்த முகமூடிக் கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை வாள், கத்தி முனையில் அச்சுறுத்தி 3 இலட்சம் ரூபா பணம்,35 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்த துணிகரச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் நவாலி தெற்கு மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி பகுதியில் உள்ள ரி.இராஜேந்திரம் என்பவரது வீட்டின் பின்புறமுள்ள ஜன்னல் கம்பிகளை வளைத்து அறை ஒன்றிற்குள் 4 பேர் கொண்ட முகமூடிக் கொள்ளையர்கள் நுழைந்தனர்.

ஆள் நடமாட்டத்தை அவதானித்த குடும்பப் பெண் திடீரென கண் விழித்துள்ளார்.

இதன்போது அவர் அருகே ஒருவர் நடமாடுவதை அவதானித்துள்ளதுடன் அந்நபர் தனது வீட்டில் உள்ளவர் என நினைத்து கதை கேட்டுள்ளார்.

அந் நபரிடம் இருந்து பதில் எதுவும் வராததை யடுத்து வீட்டுக்குள் கொள்ளையர்கள் புகுந்துள்ளதை உணர்ந்ததுடன் திருடன் என சத்தமிட்டுள்ளார்.

மனைவியின் சத்தத்தைத் கேட்ட அப் பெண்ணின் கணவரும் உறக்கத்தில் இருந்து விழித்துள்ளார்.

இதேவேளை அவர்கள் முன்னால் 4 பேர் கொண்ட முகமூடிக் கொள்ளையர்கள் நின்றிருந்ததுடன் கிறிஸ் கத்தி, வாள், பொல்லுகள் என்பவற்றையும் வைத்திருந்தனர்.

இதனைக் கண்ட அப் பெண் அவரது கணவனும் உரத்த சத்தம் போட்டனர்.

இதன்போது அப் பெண்ணின் கணவரை அக் கொள்ளையர்கள் கொட்டன்களால் தாறுமாறாக தாக்கியதுடன் இருவரது கழுத்துக்களில் வாள்கள் வைத்து அச்சுறுத்தப்பட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பணம், நகை என்பவற்றை கொள்ளையடித்ததுடன் 2 பெண் பிள்ளைகளின் கழுத்தில் கத்தி வைத்து அச்சுறுத்தப்பட்டு ஒரு பெண் பிள்ளையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

மொத்தமாக 3 இலட்சம் ரூபா பணமும் 35 பவுண் தங்க நகைகளையும் கொள்ளையடிக்கப்பட்டன.

35 நிமிடங்கள் அவ் வீட்டில் இருந்த கொள்ளையர்கள் அதிகாலை 1.05 மணியளவில் வெளியேறியுள்ளனர்.

கொள்ளையர்கள் வெளியேறியவுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளைமேற்கொண்டதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# திலங்கவிடம் 1000 மில்லியன் நட்டஈடு கோருகிறார் அர்ஜுன

(கொழும்பு)

பிரதிசபாநாயகரும்ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் தலைவருமான திலங்க சுமதிபால விடம் ஆயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு கோரி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சட்டக் கடிதம்ஒன்றை அனுப்பியுள்ளார்.

தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வ்கையில் கருத்து வெளியிட்டதாக கூறியே இந்த நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

இந்த மாத முதல்பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைத் தேர்தலில் திலங்க சுமதி பால வெற்றி பெற்றார்.

இதனையடுத்து போட்டியில் தோல்வியடைந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கிரிக் கெட் சபை வியாபார மாபியாவின் கைகளுக்கு சென்று விட்டதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து திலங்க சுமதிபால தெரிவித்த கருத்தே தம்மை அபகீர்த்திக்கு உள்ளாக்கியதாக அர்ஜுன தெரிவித்தார்.

இதேவேளை தமது கடிதத்துக்கு 14 நாட்களுக்குள் பதில் வழங்காது போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அர்ஜுன ரணதுங்க எச்சரித்துள்ளார். (இ)

# தமிழ் மொழியில் தேசியகீதம்; இரண்டானது அமைச்சரவை

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதத்தை தமிழிலும் பாட வேண்டும் என்ற நிலைப்பாடு தொடர்பில் அமைச்சரவையின் உறுப்பினர்கள் இரண்டு பிரிவுகளாக பிரிந்து செயற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் நல்லிணக்கம் தொடர்பான குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் பட்டபோது சில அமைச்சர்கள் இந்த யோசனைக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

எனவே இது தொடர்பில் இறுதித்தீர்மானம் எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

தேசியகீதத்தை தமிழில் பாடுவதன் காரணமாக நல்லிணக்கத்துக்கு உந்துதலை அளிக்கமுடியும் என்று நல்லிணக்கத்துக்கான குழு பரிந்துரை செய்திருந்தது.

தற்போது தமிழ் பிரதேசங்களில் தேசிய கீதம் தமிழிலேயே பாடப்படுவதையும் அந்தக்குழு சுட்டிக்காட்டியது.

எனினும் அமைச்சர்கள் சிலர் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டமையை அடுத்து தாம்பிரதமருடன் பேசி இதற்கு தர்வை அறிவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் அமைச்சர்கள் இனிமேல் எந்தக்கருத்தையும் வெளியிடக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் ராஜித சேனாரத்ன உள்ளிட்டோர் தேசிய கீதம் சிங்களத்திலும் தமிழிலும் பாடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். (இ)

# ஐ.தே.க. அமைச்சர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை கூட்ட முடிவின் பின்னர் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமைச்சுக்களிடையே காணப்படும் சிக்கல்களை இல்லாமல் செய்யும் விதமாக செயற்படுமாறு ஐ.தே.க. அமைச்சர்களுக்கு ஜனாதிபதி இதன் போது ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் இந்த ஆலோசனைக்கு சகல ஐ.தே.க. அமைச்சர்களும் உடன்பாடு தெரிவித்ததாக தெரிய வருகின்றது. (இ)

### 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணம்

# சர்பராஷ் கான், வோஷிங்டன் சுந்தர் அசத்தல் அயர்லாந்தை வீழ்த்தி இந்தியாவுக்கு உற்சாக வெற்றி

சர்பராஷ் கான், வோஷிங்டன் சுந்தரின் துடுப்பாட்டமும் ராகுல் பதாம், அவேஸ் கான், மகிபால் லாம்ரோரின் அசத்தலான பந்து வீச்சும் கைகொடுக்க அயர்லாந்து அணியை 79 ஓட்டங்களால் வீழ்த்தி இந்திய அணி, 19 வயதுக்



குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகளை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது.

19 வயதிற்குட்பட்டோருக்கான இளைஞர் உலகக்கிண்ணப் போட்டிகளின் 11ஆவது அத்தியாயம் நேற்று முன்தினம் பங்களாதேஷில் ஆரம்பமாகியது.

இத்தொடரின் 5ஆவது லீக் போட்டி குழு டியில் இடம்பெற்றுள்ள இந்தியா - அயர்லாந்து அணிகளுக்கு இடையில் நேற்று மிர்பூரில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய இந்திய அணிக்கு அணித் தலைவர் இஷான் கிஷான், விக்கெட் காப்பாளர் ரிஷாப் பந்த் ஆகியோர் ஆரம்பம் கொடுத்தனர்.

இஷான் டக்அவுட் ஆகியும், பந்த் 6 ஓட்டங்கள் எடுத்தும் ஏமாற்றம் அளித்தனர்.

3ஆவது விக்கெட்டுக்கு ராக்கிபுய் உடன் சர்பராஷ் கான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவுக்கு நிலைத்து நின்று விளையாடியது. புய் 39 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த அர்மான் ஜாபர் 4 ஓட்டங்கள் எடுத்து பெவிலியன் திரும்பினார்.

6ஆம் இலக்க வீரராக சுந்தர் களமிறங்கி களத்தில் நின்ற சர்பராஸ் கானுடன் இணை சேர்ந்தார். இந்த இணை சிறப்பாக செயற்பட்டு தமக்கிடையில் 5 விக்கெடடுக்காக 110 ஓட்டங்களை இணைபபாட்டமாகப் பகிர்ந்தவேளை சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சர்பராஷ் கான் 70 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய வோஷிங்டன் சுந்தர் 71 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

8ஆம் இலக்க வீரராக களமிறங்கிய ஷீஷன் அன்சாரி 36 ஓட்டங்கள் எடுக்க இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 268 ஓட்டங்கள் எடுத்தது.

பநதுவீச்சில் அயர்லாந்து அணி சார்பில் லிட்டில், அன்ட்ரெஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பின்னர் 269 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயரலாந்து அணி களம் இறங்கியது.

தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர்.

அயர்லாந்து அணி தமது முதல் 4 விக்கெட்டுக்களையும் வெறும் 46 ஓட்டங்களுக்கு பறிகொடுத்தது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த லோர்கான் டக்கர் - வில்லியம் மெக்கிளின்டாக் இணை தமக்கிடையில் 113 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு தெம்பூட்டிய போதிலும் தமது அணியின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இறுதியில் அயர்லாந்து அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களை எடுத்து. 79 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.


துடுப்பாட்டத்தில் லோர்கான் டக்கர் 57, வில்லியம் மெக்கிளின்டாக் 58 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் ராகுல் பதாம் 3, அவேஷ் கான், மகிபால் லாம்ரோர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் சர்பராஷ் கான் தெரிவானார்.


இதேவேளை நேற்றைய நாளில நடைபெற்ற மற்றைய போட்டிகளின் முடிவுகளின்படி ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களாலும் கனடாவை இலங்கை 196 ஓட்டங்களாலும், நியூசிலாந்தை நேபாளம் 32 ஓட்டங் களாலும் வீழ்த்தின.

30ஆம் திகதி இந்தியா தனது அடுத்த போட்டியில் நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. (க)



### அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

## பெடரரை வீழ்த்தி ஜோகோவிக் இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்



வருடததின் முதல் கிராண்ட்ஸலாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற ஆண் களுக கான ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் முன்னணி வீரரான ஜோகோவிக் - ரோஜர் பெடரர் பலப்பரீட்சை நடத்தினர்.

ஆரம்பம் முதலே ஜோகோவிக் அதிரடியாக விளையாடினார். ஜோகோவிச் ஆட்டத்துக்கு பெடரரால் ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை.

இதனால் முதல் இரண்டு செட்களையும் ஜோகோவிக் 6-1, 6-2 என எளிதில் கைப்பற்றினார்.


ஆனால் 3ஆவது செட்டை 3-6 என இழந்தார். இருந்தாலும், சுதாரித்துக்கொண்டு விளையாடி 4ஆவது செட்டை 6-3 என கைப்பற்றி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் ஜோகோவிக்.

இன்று நடைபெறும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஆண்டி முர்ரே- ரயோனிக் ஆகியோர் மோதுகிறார்கள்.

இதில் வெற்றி பெறும் வீரர் ஜோகோவிக் உடன் இறுதிப் போட்டியில் மோதுவார். (க)

### விக்கெட் வேட்டையின் பின் அளவுக்கதிகமான ஆர்ப்பரிப்பு

## ஹார்த்திக் பாண்டியாவுக்கு அபராதம் விதிப்பு



விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் அளவுக்கு அதிகமான முறையில் ஆர்ப்பரித்த இந்தியாவின் இளம் சகலதுறை வீரர் ஹார்த்திக் பாண் டியா அபராததுக்குட்பட்டுள்ளார்.

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதல் இரு பது-20 போட்டி அடிலெய்ட் ஓவலில் கடநத 26ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியின் மூலம் இந்திய அணியில் அறிமுகமாகிய பாண டியா முதல் ஓவரில் ஐந்து வைட் பந்து கள் உட்பட 19 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தார். அதன்பின் சிறப்பாகச் செயற்பட்ட அவர் 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்

ஆட்டத்தின் 16ஆவது ஓவரை பாண்டியா வீசினார். இந்த ஓவரில் கிறிஸ் லீன் ஆட்டமிழந்தார். தன்னுடைய முதல் சர்வதேச விக்கெட்டை வீழ்த்திய சந்தோசத்தில் அதிக அளவில் கொக்கரித்துக் கொண்டு ஓடினார். சர்வதேச போட்டியில் விக்கெட்டுக்களை வீழ்த்தியபின் சந்தோஷத்தை வெளிப்படுத்த வரைமுறை உள்ளது.

இதை பாண்டியா மீறிவிட்டதாக புகார் அளிக்கப்பட்டது. இதனால் அவருக்கு போட்டியின் சம்பளத்தில் இருந்து 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### வருணபகவான் குறுக்கீடு

## பாகிஸ்தான் - நியூசிலாந்து ஆட்டம் கைவிடப்பட்டது

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒரு நாள் சர்வதேச போட்டி மழைகாரணமாக எந்தவொரு பந்தும் வீசப்படாமல் கைவிடபபட்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் வெலிங்டனில் நடந்த முதல் போட்டியில் நியூசிலாந்து 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2ஆவது ஒரு நாள் போட்டி நேப்பியரில் நேற்று நடைபெறுவதாக இருந்தது.

மழையால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை விட்டபிறகு 20 ஓவர் ஆட்டமாக வது போட்டியை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் விடாமல் மழை பெய்ததனால் போட்டி எந்தவொரு பந்துவீச்சும் வீசப்படாமல் கைவிடப்பட்டது. (க)







வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தின் மூலம் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு அமைத்து கொடுக்கப்பட்ட வீட்டினை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்துள்ளார். புத்தூர் கிழக்கிலேயே இவ்வாறு வீடு திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தில் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வீட்டினை சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் மாலை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்ததோடு மங்கல விளக்கினையும் ஏற்றி வைத்தார். முதலமைச்சர் நிதியத்தில் ஏற்கனவே முதலாவது வீடு அமைத்து கையளிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புத்தூரில் கையளித்த வீடு இரண்டாவது வீடாகும். தனது ஒரு பிள்ளை மற்றும் தனது தாயுடன் தான் ஒரு கொட்டில் வீட்டில் வசித்து வந்ததாகவும் தற்போது அமைத்துக் கொடுக்கப்பட்ட கல்வீடு எமக்கு பாதுகாப்பாக உள்ளதாகவும் அப்பெண் முதலமைச்சரிடம் நன்றி தெரிவித்துள்ளார். (படங்கள்: உ.சாளின்)

# பிரதமர் ரணில் மீது பிக்குகள் குற்றச்சாட்டு

## *காவி உடை தரித்தவர்களை நீதிமன்றுக்கு அனுப்பினாராம்*



ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் காவியுடை அணிந்து குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அனுப்பி வைக்கப்பட்டவர்களே அன்றி அவர்கள் பொதுபல சேனாவைச் சார்ந்தவர்கள் இல்லை என தேசிய பிக்குகள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட தேரரை விளக்க மறியலில் வைக்குமாறு ஹோமாகம நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பாக தேசிய பிக்குகள் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. அதில்,

ஹோமாகம நீதிமன்றத் தில் இடம்பெற்ற குழப்ப நிலை நாட்டில் இரண்டு விதமாக சட்டம் அமுல்படுத் தப்படுகின்றது என்பதை எடுத் துக்காட்டுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பி னர் ஹிருணிகா பிரேமச்சந்திர கடத்தலுடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும் ஞானசார தேரர் நீதிமன்றை அவமரியாதை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் சட்டம் இரண்டு விதமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது என தேசிய பிக்குகள் அமைப்பின் பாஹியன்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

இரண்டு சம்பவங்களின் போதும் சட்டத்தை அமுல்படுத் தும் தரப்பினர் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பது மூலம் நாட்டின் சட்டம் ஒழு ங்கு நிலையை புரிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் குழப்பம் விளைவித்தவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவினால் அனுப்பப்பட்ட காவி உடை அணிந்தவர்களே. இவர்கள் பொதுபல சேனாவைச் சேர்ந்தவர்கள் அல்லர் என அவர் தெரிவித்தார்.

எனினும் ஞானசார தேரர் மன்னிப்பு கோரியதாகவும் அதனால் அவருக்கு பிணை வழங்கியிருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுபல சேனா, ராவணா பலய மற்றும் சிங்கள உறுமய போன்ற அமைப்புக்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


97வது மற்றும் 98வது கிளைகள் 29-01-2016

மாத்தறை அவிசாவளை புறக்கோட்டை பதுளை பொரளை அதுருகிரிய ஹெந்தல கதுருவெல பலாங்கொடை அம்பாந்தோட்டை கேகாலை நவம் மாவத்தை சிலாபம் ஹோமாகம எல்பிட்டிய கல்முனை அம்பலன்கொட ஹெந்தல வெள்ளவத்தை கெகிராவ ஹொரண மஹியங்கனை மதுகம கண்டி மானிப்பாய் கந்தானை காலி ராஜகிரிய தம்புள்ள எல்பிட்டிய ஹோமாகம ஹெவ்லொக் டவுண் எல்பிட்டிய கடுவெல பண்டாரவளை குருணாகல் கதுருவெல வவுனியா யாழ்ப்பாணம் பிலிமத்தலாவ நாரம்மல அம்பாறை இரத்தினபுரி ஹெந்தல பாணதுறை மாலபே

# திருநெல்வேலி
மற்றும்
# சாவகச்சேரி
வெற்றிப்பாதையை முன்னோக்கி

கொள்ளுப்பிட்டிய பிட்டகோட்டை தலைமைக் காரியாலயம் அக்குரெஸ்ஸ ஜா-எல கல்கிஸ்ஸை சிலாபம் கொச்சிகடை வாரியபொல யக்கல சுன்னாகம் கல்முனை கொஹுவல திருகோணமலை மாத்தறை கேகாலை மஹியங்கனை வெள்ளவத்தை வத்தளை நவம் மாவத்தை கம்பஹா இரத்தினபுரி நீர்கொழும்பு மினுவாங்கொடை செங்கலடி நெல்லியடி பழைய சோனகத் தெரு களுத்துறை எம்பிலிபிட்டிய புறக்கோட்டை வரகஸ்மங்ஹந்திய ராஜகிரிய பொரலஸ்கமுவ யக்கல மட்டக்களப்பு குருணாகல் காலி கண்டி சிட்டி சென்டர் அம்பாந்தோட்டை கம்பளை மதுகம நாராஹென்பிட்ட கதுருவெல இரத்மலானை ஜா-எல அம்பாறை மாத்தளை

**எமது புதிய கிளைக்கு விஜயம் செய்து சிறந்த வங்கிச் சேவைகளை அனுபவித்திடுங்கள்**

• நடைமுறைக் கணக்குகள் • சேமிப்புக் கணக்குகள் • நிலையான வைப்புக் கணக்குகள் • வீட்டுக் கடன் • தனிநபர் கடன் • வாகனக் குத்தகை வசதிகள் • வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை • சிறிய நடுத்தரளவு வியாபாரத்திற்கான கடன் வசதி - நீண்ட கால கடன் வசதி (குறைந்த வட்டிக்கு), குறுகிய கால கடன் வசதி உட்பட்ட பல்வேறு வங்கி மற்றும் நிதிச் சேவைகள்

**இல. M102, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே: முகாமையாளர் (நேரடி) - 021 221 6440, பொது - 021 221 6441 / 021 221 6442 | தொலைநகல்: 021 221 6443

**இல. 1,3,5, கண்டி வீதி, சாவகச்சேரி.**

தொ.பே: முகாமையாளர் (நேரடி) - 021 227 1360, பொது - 021 227 1361 / 021 227 1362 | தொலைநகல்: 021 227 1363

கொடுக்கல் வாங்கல் செய்யும் நேரம்:
அலுவலக தினங்களில் - திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 - மாலை 4 மணி வரை

011 244 8888 | www.ndbbank.com

NDB வங்கி
எங்கள் அர்ப்பணிப்பு. உங்கள் வெற்றி.

# நவக்கிரியில் நிலவெடிப்பு ஏற்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார் முதலமைச்சர்




(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் மேற்கு நவக்கிரி பகுதியில் திடீரென ஏற்பட்ட நிலவெடிப்புகளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன்நேரில் சென்று பார்வையிட்டுளளார். புத்தூர் மேற்கு நவக்கிரி பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நள்ளிரவு வேளை பாரிய சத்தத்துடன் நிலத்தில் திடீர் விரிசல் உண்டாகி யிருந்தது. இந்நிலையில குறித்த நிலவிரிசலுக்கு காரணம் நில அதிர்வு என மக்கள மத்தியில் பேசப்பட்டு வந்தது.

இந்நிலையில், புவியியல் துறை பேராசிரியர்கள் மேற்படி நில விரிசலுக்கு காரணம நில அதிர்வு அல்ல. நிலத்தின் கீழ் உள்ள சுண் ணாம்பு பாறைகள் இடிந்துள்ளமையே என சுட்டிக்காட்டியிருந்தனர். மேலும் நிலாவரை கிணறு மற்றும் மானிப்பாய் கட்டுடை பகுதியில் உள்ள இடிகுண்டு போன்று இந்தப் பகுதியும் நிலத்திற்கு கீழ் செல்லும் அபாயம் உள்ளதாகவும்கூறியிருந்தனர்.

இதற்கிடையில் மேற்படி பகுதியில் உருவாகியிருந்த நில விரிசல் கடந்த சில தினங்களில் அதிகரித்ததுடன் சிறிய விரிசல்களாக இருந்தவை பெரிய விரிசல்களாக மாறியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இந் நிலையில் நேற்று முன்தினம் மேற்படி பகுதியிலிருந்து மக்களை வெளியேற்றியுள்ளதுடன், தோட்டங்களுக்கு நீர் இறைப்பதையும் தடை செய்துள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்படி பகுதியை அனர்த்த பகுதியாக அறிவித்தது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு நேற்று முன் தினம் சென்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் நவக்கிரியில் இடம் பெற்ற நிலவெடிப்பு குறித்து பார்வையிட்டுள்ளார். இதன் பின்னர் வடக்கு மாகாண சூழலியல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனை சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு முதலமைச்சர் பணித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. (இ-4-9)

# பயிற்சி நெறிகள் விரைவில்

(கரணவாய்)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் நடத்தும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் (சித்தியடைந்த) மாணவர்களுக்கான 150 மணித்தியாலங்களைக் கொண்ட இலவச கணனி பயிற்சி வகுப்புகள் வாரநாட்களில் காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரைநடைபெறும்.

அத்துடன் அன்றையதினம் தொடக்கம் 30 மணித்தியாலங்களைக் கொண்ட தமிழ் கணனித்தட்டச்சுவிசைப்பலகை பயிற்சியும் நடை பெறும். 3 ஆம் திகதி தொடக்கம் ஏதாவது நிறுவனத்தில் 100மணி நேரம் கொண்ட அடிப்படை சிங்கள மொழிப் பயிற்சியைப் பெற்றவர்களுக்கான 25 மணித்தியாலங்களைகொண்ட 3அடிப்படை சிங்களப் பேச்சுப் பயிற்சியும் நடைபெறும்.

6ஆம் திகதி தொடக்கம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத 20 மாணவர்களுக்கான 50மணி நேரம் கொண்ட அடிப்படை பயிற்சியும் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் வதிரி, கரவெட்டி என்ற முகவரியில் அமைந்துள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தில் விபரங்களை பதிவு செய்து கொள்ள முடியும். இது தொடர்பான விபரங்களுக்கு 021 226 4211, 077 864 8213 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தின் தலைவர் வசிவச்சந்திர தேவன் அறிவித்துள்ளார்(இ-5-60)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற் பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.செல்வதாஸன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நில அளவையாளர் ஸ்கந்தவரோதயன் ஆர். இராசவிஜயன் (கொழும்பு பழைய மாணவர் சங்கம்) கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக உடுவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முக குலகுமரன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக கல்லூரியின் முன்னாள் உப அதிபர் ஸ்கந்தவரோதயன் கே.புவனேந்திரநாதன் (கொழும்பு பழைய மாணவர் சங்கம்)கலந்து கொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை கொழும்பு கணித பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி அருந்ததி இராசவிஜயன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (இ-5)

# கழிவுநீரை அகற்றுவதிலுள்ள குறைபாடுகள் நிவர்த்தியாகும்

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் அகற்றுவதில் உள்ள குறைபாடுகள் மிகவிரைவில் நிவர்த்தி செய்யப்படும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றல் செயற்பாடுகள் சரியான முறையில் நடைபெறுவதில்லை எனவும் கழிவுநீர் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை எனவும் இதனால் பாரிய அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கி வருவதாக பொது மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக அவரை தொடர்புகொண்டுகேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் அகற்றப்படும் கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் போடப்பட்டு வந்தது. அதே போன்று கழிவுநீர் உறிஞ்சு குழி மூலமாக வெளியேற்றப்பட்டு வந்தது.

இந்த செயற்பாட்டு முறை உகந்தது அல்ல என தெரிவிக்கப்பட்டமையை அடுத்து நீதிமன்றினால் தடை செய்யப்பட்டது.


உரிய முறையில் கழிவு நீரை அகற்ற வேண்டுமென நீதிமன்றினால் அறிவுறுத்தப்பட்டமைக்கமைய தற்போது தற்காலிகமாக புதிய தடாக முறையில் அமைந்த பரிகரிப்பு தொகுதி ஒன்றை அமைத்துள்ளோம்.

அத்தொகுதி முறைக்கு நீதிமன்றில் அனுமதி கேட்டுள்ளோம்.

நீதிமன்றினால் அனுமதி கிடைத்தவுடன் வெகு விரைவில் கழிவு நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உரிய கழிவு நீர் அகற்றல் பொறி முறை செயற்படுத்தப்படாமையால் கழிவுநீரை உரிய முறையில் அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மானிப்பாய் பொலிஸார் அதிரடி கைக்குண்டுடன் ஒருவர் கைது

## பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்பு



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் நீண்ட காலமாக பல கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த நபரொருவரை கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி ஜ.பி. நாலக்க ஜெயவீர தெரிவித்துள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடமிருந்து பத்து பவுணுக்கும் மேற்பட்ட நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

உடுவில் கிழக்கு இணுவில் பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளதாக அவர் மேலும தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து உள்ளூர் கைகுண்டு ஒன்றும் நவீன ரக விலையுயர்ந்த கைத்தொலைபேசிகள எட்டும் 10 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளும் 4200ரூபா பணமும் விலையுர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் மிக நீண்ட காலமாக மானிப்பாய் மற்றும் ஏனைய பகுதிகளில் பல்வேறு கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்நிலையில் இவர் கைது செய்யப்படுவதற்கு முன்னைய இரு நாட்களாக மானிப்பாய் பகுதியில் நகை மற்றும் பணம என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளார்.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மானிப்பாய் பகுதியில் இருந்து இணுவில் பகுதிக்கு மாலை நேரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாக செல்வது அங்கிருக்கும் வீடுகள் மற்றும் வியாபார நிறுவனங்களுடைய பாதுகாப்பு கமராக்கள் மூலம் அவதானிக்கப் ட்டிருந்ததோடு அதனூடாக முன்னெடுக்கப் பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த நபரை நேற்று முன் தினம் இரவு தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் குறித்த நபர் உள்ளூர் கைக்குண்டை பொலிஸார் மீது தாக்குதல் நடத்தவே வைத்திருந்ததாக வும் குறித்த கைக் குண்டு தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற் கொள்ள அதனை அரச இரசாயன பகுப்பாய்வு துறையினருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். குறித்த கைது நடவடிக்கையானது மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு புதிதாக இடமாற்றம் பெற்று வந்துள்ள பொறுப்பதிகாரி ஜ.பி.நாலக்க ஜெயவீர தலைமையிலான எஸ்.ஜ. மிலால், எஸ்.ஜ. பேட்டி, பொலிஸ் அதிகாரி பண்டார சுகந்தன் தானநாயக்க மற்றும் சாகர ஆகியோர் அடங்கிய குழுவாலே மேறகொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979RC<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:32<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:HNDA, B.COM/ அரசதொழில்<br>தொ.இ: B/3611 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 45<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4158 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 28 சூரிசெவ் 11 ல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:HNDA, B.COM/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3615 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 58செவ் 7 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4160 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 38செவ் 2 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3617 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 17<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:Charted<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4161 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 37சூரிசெவ் 7 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/Lகனடா<br>தொ.இ: B/3620 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19செவ் 7 ல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4162 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# மோ.சைக்கிள்- ஆட்டோ நேருக்குநேர் மோதியது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் பலாலி வீதி கந்தர்மடம் இலுப்பையடிச் சந்தியில் இடம்பெற்றது.

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த யோகரத்தினம் யோகராஜ் (வயது- 31) என்ற 2 பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ் விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த மேற்படி குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-30)

# அதிபர்கள் கண்காணிப்பில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு

அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எதிரான இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக இலஞ்சஊழல் ஆணைக் குழு மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஆணைக்குழுவின் ஆணையா ளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவானது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர் பாக விசாரணை செய்வதற்கே அமைக்கப்பட் டுள்ளது.பாடசாலை அனுமதி நிராகரிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் மற்றும் அநாம தேய நபர்களினால் செய்யப்பட்ட, பாடசா லைகளில் இலஞ்சம் கோரப்பட்ட குற்றச் சாட் டுக்கள் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை கள் இடம்பெற்று வருகின்றன.

பொலநறுவை மற்றும் கேகாலை ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் இலஞ்சம் கோரப்பட்டமை தொடர்பாக தற்போது விசார ணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவ தாக ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)


## University of Jaffna

**UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE COMMENCEMENT OF ACADEMIC ACTIVITIES**

***B.Sc.in Medical Laboratory Sciences, B.Sc.in Nursing and Bachelor of Pharmacy***

The Orientation Programme For the newly admitted first year students to the Unit of Allied Health Sciences, Faculty of Medicine, and University of Jaffna for the Academic Year of 2015/2016 Will commence on Monday, 8th of February 2016 at 9.30 am at the **Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil.**

The new students are requested to participate in the Orientation Programme Without Fail.

**Registrar**
**University of Jaffna**
**28.01.2016**

(C-3558)

## மாபெரும் புத்தகக் கண்காட்சி

**மக்மிலன் புத்தகசாலை**
**யாழ்ப்பாணம், கொழும்பு**

**இடம்:-** யாழ். மாநகர சபை மைதானம்
(சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)

**காலம்:-** 29 ,30, 31/01/2016

**காட்சியறை இல :- 159, 160**

பாடசாலைக்கு தேவையான அனைத்து புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:-**
**0776218383**
**0112449565**

(3417)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சரஸ்வதியாக 28.02.1940

சிவகதியாக 31.12.2015



## அமரர் செல்வம் சரஸ்வதி

எமது குடும்பத்தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து, நேரில் வருகை தந்தும், தொலைபேசியினூடாகவும் மலர் வளையங்கள் மூலமும் கண் ணீர் அஞ்சலிகள் மூலமும் தமது அனுதாபங்களைத்தெரிவித்தோடு எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து உறவினர்கள், உற்றார், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கிறோம். 29.01.2016 இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.
29.01.2016

கந்தையா செல்வம்,
செ. கண்ணதாசன்,
செ. மணிவண்ணன்,வி. உமாதேவி

## இராசி பலன்

29.01.2016
(தை 15, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
பஞ்சமி பிற்பகல் 2.18 மணிவரை
அத்தம் முழுவதும்
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் | குரு சந் |

வளவன்

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,ஆரோக்கியமான நாள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம்,அரசு வழியில் அனுகூலமுண்டு, அருமையான நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்:** தொலைபேசி வழித்தகவலால் சந்தோசம் அதிகரிக்கும், வழி பாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பணவரவு திருப்தி தரும் வகையில் அமை யும்.

**கும்பம்:** குடும்பத்தில் சிறு மனக்கசப்பு ஏற்பட்டு விலகும், எடுத்த காரியங் களில் தாமதங்கள் ஏற்படலாம் துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்,வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**மகரம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு,வழிபாட்டால் குதூ கலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் கைகூடும் நாள்,ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சான் றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வரு மானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும்,போசன சுக முண்டு.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்காக பல மணிநேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம்,புண்ணிய காரியங் களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்,போசன சுக முண்டு.

## நீதியமைச்சர் பதவி விலகல்



பிரான்ஸில் அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிரவாத குற்றச்சாட்டுக்குள்ளானவர்களின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்வது தொடர்பான திட்டம் குறித்து விவாதத்தில் ஈடுபடுவதற்கு சிறிது முன்னர் அந்நாட்டு நீதி அமைச்சர் கிறிஸ்ரியன் தோபிரா பதவி விலகியுள்ளார்.


அவரது பதவி விலகலை பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கொயிஸ் ஹொலண்ட் ஏற்றுக் கொண்டுள்ளதாக எலிஸி மாளிகை தெரிவித்தது.

மேற்படி சர்ச்சைக்குரிய பிரேரணை தொடர்பில் கிறிஸ்ரியன் தோபிரா கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் நவம்பர் 13 ஆம் திகதி பாரிஸில் 130 பேர் பலியாவதற்கு காரணமான தீவிரவாதத் தாக்குதல்களையடுத்து தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்களின் பிரஜாவுரிமையை நீக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

பிரான்ஸின் சிரேஷ்ட கறுப்பின அரசியல்வாதிகள் சிலரில் ஒருவராகவுள்ள கிறிஸ்ரியன் தோபிராவின் இடத்திற்கு அந்தத் திட்டத்தின் ஆதரவாளரான ஜீன் ஜக்குயஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

# இலட்சக் கணக்கான மக்கள் பார்த்து ரசித்த மலர்க்கண்காட்சி



இந்தியாவில் லால்பாக்கில் நடந்த குடியரசு தின மலர்க் கண்காட்சியை 2.75 இலட்சம் மக்கள் பார்த்து ரசித்துள்ளனர் என்று தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் எம்.ஜெகதீஷ் தெரிவித்தார்.

கர்நாடகாவில் அதிகமான சுற்றுலா தலங்கள் உள்ளன. இவற்றை சுற்றி பார்க்க வெளி யூர் மக்கள் அதிகமாக கர்நாடகாவிற்கு வந்து செல்கின்றனர். அப்படி வரும் மக்கள் பெங்களூரில் உள்ள லால் பாக் பூங்காவுக்கு வந்து குடியரசு தினத்தையொட்டி அமைக் கப்பட்டிருந்த மலர்க்கண்காட்சியை கண்டு ரசித்தனர். இம்மலர்க் கண் காட்சியை 2.75 இலட்சம் பேர் பார்த்துள்ளனர்.

இதில் 19 ஆயிரம் பேர் குழந்தைகள், சிறுவர்கள் என்று குறிப்பிடத்தக்கது. இவர்களிடம் இருந்து நுழைவு கட்டணமாக ரூ. 1.31 கோடி வசூலிக்கப்பட்டது. கடந்த 2015ம் ஆண்டு 1.20 கோடி கட்டணம் வசூல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு நுழைவு கட்டணம் அதிகரித்துள்ளதால் அதிகமான வசூல் ஏற்பட்டுள்ளது. குடியரசு தினத்தில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் 6.30 மணி வரை கட்டணம் வசூல் செய்யப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ)

## மிதக்கும் அணுமின் நிலையம் அமைக்க சீனா புதிய திட்டம்




நிலத்தில் அமைந்துள்ள அணு உலைக்கு எதிரான கோரிக்கைகள் பல்வேறு நாடுகளில் எழுந்து வரும் நிலையில் கடலில் மிதக்கும் அணுமின் நிலையத்தை அமைக்க சீனா திட்டமிட்டு வருவதாக அந்நாட்டு மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து சீன அணு சக்திக் கட்டுப்பாட்டு அமைப்பின் தலைவர் ஜு டாஷே கூறுகையில், "சீனாவின் அணு மின் உற்பத்தியை எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக்கத் திட்டமிட்டுள்ளோம். இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக கடலில் மிதக்கும் அணுமின் நிலையத்தை உருவாக்க முடிவு செய்துள்ளோம்.

இதையொட்டி கடல் வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள சீனா முடிவு செய்துள்ளது" என்றார்.

கடலில் விமானம் தாங்கிக் கப்பல்களிலும், நீர்மூழ்கிக் கப்பல்களிலும் அணுசக்தி நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக கடலில் அணுசக்தி உற்பத்தி செய்யப்படுவதில் ரஷ்யாவிற்கு அடுத்து சீனா இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## புகைப்படத்தின் விலை 1 மில்.யூரோ





மிகச் சாதாரணமாக எடுக்கப்பட்ட ஒரு உருளைக்கிழங்கு புகைப்படம் சுமார் 1 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனையாகியுள்ளது.

இது 2010 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம். இதில் இருப்பது அயர்லாந்து நாட்டில் விளைந்த செயற்கை (ஆர்கானிக்) உருளைக்கிழங்கு.

இந்த புகைப்படத்தின் உரிமையாளரான கெவின் அபோஷ் இடம் பெயர் குறிப்பிட விரும்பாத தொழிலதிபர் ஒருவர் உங்கள் புகைப்படத்தை பாரிசில் நடந்த கண்காட்சியில் பார்த்திருக்கிறேன். அதை வாங்கிக் கொள்ள ஆசைப்படுகிறேன் என்று கெவினின் வீட்டுக்கே வந்து கேட்க, கெவினும் சம்மதம் தெரிவிக்கவே சில தினங்களுக்கு பின்னர் 1 மில்லியன் யூரோ கொடுத்து அந்த தொழிலதிபர் இந்த புகைப்படத்தை விலைக்கு வாங்கிச் சென்றுள்ளார்.

ஹொலிவுட் பிரபலங்கள் ஜொனி டெப், ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் போன்றவர்களை பிரத்தியேகமாக புகைப்படமெடுத்த பிரபல புகைப் படக் கலைஞர்தான் கெவின் அபோஷ்.

அதிக விலைக்கு விற்பனையான புகைப்படங்களின் வரிசையில் இந்த புகைப்படம் 15 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. முதலிடத்தில் 4.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனையான அணட்ரியாஸ் கர்ஸ்கி ஆல் பிடிக்கப்பட்ட "Rhein II" புகைப்படம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## தற்கொலைத் தாக்குதல்களில் 22 பேர் பலி; 100 பேர் காயம்



மத்திய சிரியாவிலுள்ள ஹொம்ஸ் நகரில் இராணுவச் சோதனைச் சாவடியொன்றை இலக்குவைத்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இரட்டை தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 22 பேர் பலியானதுடன் 100 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி தாக்குதல்கள் இடம்பெற்ற அல்ஸக்ரா நகரின் அருகிலுள்ள பிராந்தியமானது ஏற்கனவே பல தடவைகள் தாக்குதல்களுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஈரானிய ஜனாதிபதி விஜயத்தையொட்டி மூடப்பட்ட இத்தாலிய நிர்வாண சிலைகள்

ஈரானிய ஜனாதிபதி ஹஸன் ரோவ்ஹானியின் விஜயத்தையொட்டி இத்தாலியிலுள்ள பண்டைய நிர்வாண சிலைகள் மூடப்பட்டமை தொடர்பில் அந்நாட்டுப் பிரதமர் மற்றியோ றென்ஸி கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளார்.

ஈரானிய ஜனாதிபதியின் இந்த இரு நாள் விஜயத்தின் போது இரு நாடுகளும் 17 பில்லியன் யூரோ பெறுமதியான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈரானின் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குறிப்பிடாதது மட்டுமல்லாமல் நாட்டின் கலாசார சின்னங்களாகவுள்ள நிர்வாணப் பெண் சிலைகளை மறைத்ததன் மூலம் ஈரானுக்கு றென்ஸி அடிபணிந்துள்ளதாக அந்நாட்டு வலதுசாரி மற்றும் இடதுசாரி அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஏனையவர்களது கலாசாரத்தை மதிப்பதற்காக சொந்த அடையாளங்களை மறைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என இத்தாலிய முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கொனியின் பாராளுமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினரான லூகா ஸ்குயறி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் ஈரானின் வேண்டுகோளுக்கிணங்க அந்நாட்டு ஜனாதிபதிக்கான விருந்து பசாரத்தில் மதுபானங்களை பரிமாறுவதும் தவிர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலைமறைகாயாகவுள்ள கலைஞர்களை கௌரவித்து அவர்களது மனவிரக்தியைப் போக்க வழி செய்யுங்கள்

## கரைதுறைப்பற்று பிரதேச கலைஞர்கள் கோரிக்கை

(வற்றாப்பளை)

மாவட்ட ரீதியில் கல்வித் துறையில் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து கலைத்துறை வளர்ச்சிக்கு தம்மாலான கூடுதல் பங்களிப்பை செய்த கலைத்துறை சாதனையாளர்களை மத்திய, மாகாண, பிரதேச மாவட்டங்களில் விருதுகள் வழங்கி கௌரவிப்பது வழக்கமாகும்.

அவ்வாறு விருதுகளைப் பெறுவதற்கான தகுதிகள் அனைத்தும் இருந்தும் சில கலைஞர்கள் அதிகாரிகளால் கண்டும் காணாமல் விடுபட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கலையார்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இவ்வாறு உரிய கௌரவிப்புகள் எதுவும் வழங்கப்படாமல் பல முதுப் பெரும் கலைஞர்கள் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பழம் பெரும் கலைகளான வில்லுப் பாட்டு, மோசிங், புல்லாங் குழல், குடமூதல், நாட்டார் பாடல், நாட்டுக் கூத்து, வாய்ப்பாட்டு போன்ற பல துறைகளைச் சேர்ந்த கலைஞர்கள் இவ்வாறு எதுவிதமான கௌரவிப்பும் இன்றி விருதுகள் பெறாமல் பெரும் விரக்தியில் இருப்பதாக கலையார்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறானவர்களை இனம் கண்டு பிரதேச மட்டத்திலாவது கௌரவிப்பதன் ஊடாக அவர்களின் மனவிரக்தியை நீக்கிக் கொள்வதுடன் அவர்களிடம் இருந்து கலைத் திறமைகளை ஏனையோருக்கும் வழங்க முடியும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து கலைஞர்களை கௌரவிக்க முன்வர வேண்டுமெனவும் இவ் விடயம் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தனது கவனத்தை செலுத்த வேண்டுமெனவும் கலையார்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் அண்மையில் முல்லைத் தீவிற்கு வருகை தந்திருந்த கவிப் பேரரசு வைரமுத்துவும் உள்ளூர்க் கலைஞர்களைப் போற்றி கௌரவிப்பதன் ஊடாக உள்ளூரிலேயே கலைத் துறைகளை வளர்த்துக் கொள்ள முடியுமென்ற கருத்தையும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)

## வவுனியாவில் நூல் வெளியீடு

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் சேமமடுவூர் சிவகேசவனின் "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" என்னும் கவிதை நூலின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோா கலந்துகொள்வார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்தினை திருமதி. தாட்சாயினி கணேசநாதன் பாடுவார். நூலாசிரியரின் வரவேற்புரையினைத் தொடர்ந்து ஆசியுரையினை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் சு.அமிர்தலிங்கமும் வாழ்த்துரைகளை வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், படைப்பாளிகள் உலகம் அமைப்பின் ஸ்தாபகர் ஐங்கரன் கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடக்கவுரையினை வவுனியா ஆதி விநாயகராலய பரிபாலன சபையின் செயலர் சிவகஜேந்திர குமார் வழங்குவார். தலைமையுரையினைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையினை தமிழ்ச்சுடர் வன்னியூர் செந்தூரன் நிகழ்த்துவார். முதல், சிறப்புப் பிரதிகள் வழங்கலையடுதது நூல் நயவுரையினை தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) நிகழ்த்துவர். ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நூலாசிரியர் வழங்குவார். (2)

## காணாமற் போனவர்களைத் தேடும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடல்

(மல்லாவி)

காணாமற் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கமும், அதனுடன் இணைந்து செயற்படும் ஆறு நிறுவனங்களும் இணைந்து நேற்று கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் முக்கிய கலந்துரையாடல் நடைபெற்றது.



குறித்த கலந்துரையாடல் காணாமற் போனவர்களை தேடும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த காணாமற் போனவர்களின் உறவுகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கலந்துரையாடலில் 4 முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

அங்கு கருத்து தெரிவித்த மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்தந்தை செபமாலை, அண்மைக் காலங்களில் காணாமற் போனவர்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்களை பாதிக்கப்பட்ட மக்கள் கண்டிக்கின்றனர்.

பிரதமர் பொங்கல் தினத்தன்று வழங்கிய கருத்தினையும், சனல் 4 இற்கு தெரிவித்த கருத்தினையும் பாதிக்கப்பட்டவர்கள் வன்மையாக கண்டிக்கின்றனர். காணாமற் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பிரதமரின் நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பும். அதே வேளை இரகசிய முகாம்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சுகாதார அமைச்சர் இறப்பு சான்றிதழ் வழங்க இருப்பதாகக் கூறுகின்றார். காணாமற் போனவர்களுக்கு எதற்காக மரண சான்றிதழ் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பரணகம ஆணைக்குழு நீடித்தல் தமக்கு தேவை இல்லை. ஐ.நா ஆணையாளர் குறிப்பிட்டது போன்று அதனை மூட வேணடும். புதிதாக ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். மககளுக்கு நீதியையும் நிவாரணங்களையும் பெற்று கொடுக்க கூடியதாக இருக்க வேண்டும்

புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆணைக்குழுவானது. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து செயற்படுவதனால், செஞ்சிலுவை சங்கத்தின் விதிமுறைக்கமைய பெறப்பட்ட வாக்கு மூலங்களை வெளியிடக் கூடாது என பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்துவதாக அவர்மேலும் தெரிவித்தார். (2-15)

## முல்லை. நகரில் மதுபானசாலையை உடனடியாக மூடுமாறு வலியுறுத்து

### பாராளுமன்றில் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா எம்.பி. உரை

மக்களின் நலன்களை கருதாது முல்லைத்தீவுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மதுபானசாலையை மூடுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுங்கவரி மற்றும் உள்நாட்டு வரிகளின் அமர்வில் பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றம் இடம் பெற்று எமது மக்கள் மீண்டெழும் இவ்வேளையில் சமூக அபிவிருத்தியை புறக்கணிக்கும் வகையில் பொதுமக்கள் அதிகமாக வாழும் முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் சுனாமி நினைவாலயம், சிறுவர் பூங்கா, கணனி மையம் போன்றவற்றின் அருகாமையில் பொதுமக்களின் நலன்களை புறக்கணித்து மேற்படி மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நடவடிக்கையானது கண்டிக்கத்தக்கதாகும்.

எனவே இம்மதுபான நிலையத்தை உடனடியாக மூடவேண்டும் மேற்படி மதுபானசாலைக்கு அறவிடப்பட்ட வரிப் பணம் சமூகநலனை புறக்கணித்தே அறவிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் வரிப்பணம் அறவிடப்படுகையில் சமூகத்திற்கு ஏற்படும் சாதகபாதகமான நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும்.

அரசாங்கம் வரிகளை அறவிடும் போது நீதித் தன்மை பேணப்பட வேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏராளமான சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேணடியுள்ளது. இதனை கவனத்தில் கொண்டு பொருத்தமான வகையில் எமது இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பையும் துரிதப்படுத்தி நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதனூடாக சிறந்த எதிர்காலத்தை அமைக்க அனைவரும் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொணடார். (2-281-301-310)




## பளை மத்திய கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

கிளி/பளை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் சி.பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக பளை கோட்டக் கல்வி அலுவலர் ஐ.குகானந்தராசா, யாழ். வைத்தியசாலை உரிமையாளர் கோ.குலேந்திரராசா, துறைசார் விருந்தினராககிளிநொச்சி மாவட்ட செயலக விளையாட்டுத் துறை இணைப்பாளர் இ.அனுராகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## பான் ஏஷியா வங்கி அனுசரணையில் வவுனியாவில் சைவநெறிப்போட்டி

வவுனியா பான் ஏசியா வங்கி அனுசரணையுடன் வவுனியா இந்து அறநெறிப் பாடசாலைப் பேரவையானது வவுனியாவில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சமய அறிவினையும் விழுமியங்களையும் மேம்படுத்தும் நோக்கில சைவ நெறி விநாடிவினாப் போட்டி ஒன்றை எதிர்வரும் பெப்ரவரி மாதம்14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடத்தவுள்ளது. போட்டி பற்றிய விபரங்கள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் தங்கள் பாடசாலை மாணவர் விபரங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பேரவைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (2-3)

## பரந்தன்-இரணைமடுவில் அடிக்கடி விபத்துக்கள் மாடுகளைப் பிடிப்பதற்கு பிரதேசசபை தீர்மானம்

### உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடிபு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆழுகைக்குட்பட்ட பிரதேசங்களான பரந்தன், இரணைமடு ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் யாழ்.-கண்டி வீதியூடாகச் செல்லும் வாகனங்களுடன் மாடுகள் அடிக்கடி மோதுண்டு இறக்கின்றன.

இதனால் வாகன உரிமையாளர்களும் பொது மக்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களை நாளாந்தம் எதிர் நோக்குகின்றனர். போக்குவரத்து, வீதிகளுக்கு குறுக்கே தரித்து நிற்கின்ற கால் நடைகளால், வீதியில் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதால் பொது மக்களின் உடலுக்கும் உடைமைகளுக்கும் ஊறு விளைவித்து உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்துகின்றது.

இதனால் இம் மாடுகளைப் பிடிப்பதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

எனவே இவ்வாறு போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் காணப்படுகின்ற கால் நடைகள் பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் பிடிக்கப்பட்டு அக் கால்நடை உரிமையாளர்கள் மீது 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச் சபை சட்டத்தின் உறுப்புரைகள் 65,66 ஆகியவற்றுக் கமைவாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதுடன் ஒருவார காலத்திற்கு பின்னர் இந் நடவடிக்கைகள் விரைவு படுத்தப்படும் என கிளி நொச்சி பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (2-277)

## அரசியலமைப்பு யோசனைகளைப்பெற முல்லைத்தீவிற்கு செல்கின்றது குழு

(முல்லைத்தீவு)

இலங்கையின் அரசியலமைப்பில் இடம்பெற வேண்டிய சீர் திருத்தங்கள் தொடர்பான யோசனைகளைப் பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினர், எதிர் வரும் பெப்ரவரி மாதம் 12 ,13 ஆம் திகதிகளில் முல் லைத் தீவிற்கு வருகை தரவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இத்தினங்களில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பொதுமக்கள் தமது யோசனைகளை முன் வைக்க முடியும். இதற்கான விசேட படிவங்கள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான தமது யோசனைகளைக் குறிப்பிட்டு அதனை வழங்க முடியும் எனவும் அரசஅதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# 80 ஆயிரம் அகதிகளை உடன் நாடு கடத்த முடிவு

## சுவீடன் அரசு நடவடிக்கை

(சுவீடன்)

**சுவீடன் நாட்டில் 2015 ஆம் ஆண்டில் குடியேறிய அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களில் சுமார் 80 ஆயிரம் பேரை உடனடியாக அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்ப அரசு முடிவு செய்துள்ளதாக அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.**

சுமார் 9.8 மில்லியன் மக்கள் தொகை கொண்ட சுவீடன் பிற ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக அதிக எண்ணிக்கையில் அகதிகளை அனுமதித்து வருகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் அகதிகள மற்றும் புலம் பெயர்ந்தவர்கள் சுவீடன் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

சுவீடனில் அகதிகள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது போல், குற்றங்களில் ஈடுபடும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது அந்நாட்டு அரசை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

குறிப்பாக, Molndal என்ற நகரில் உள்ள அகதிகள் முகாமில் 22 வயதான Alexandra Mezher என்ற இளம்பெண் அகதிகளுக்காக சேவை செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த திங்கட் கிழமை அன்று அந்த இளம்பெண் அகதிகள் முகாமில் இரவு பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அப்போது, அந்த முகாமில் தங்கியிருந்த 15 வயதான சிறுவன்ஒருவன் அந்த இளம்பெண்ணை கொடூரமாக தாக்கி கொலை செய்துள்ளான்.

ஆனால், எதற்காக இந்த கொலை நிகழ்ந்தது என்ற காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இதேபோல், சில தினங்களுக்கு முன்னர் Vasteras பகுதியில் அகதிகளின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த 10 பொலிஸார் மீது அகதிகள் சூழ்ந்துகொண்டு தாக்க தொடங்கியுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு பின்னர், பொலிஸாருக்கு பாதுகாப்பு இல்லாததால், காவல் துறைக்கு புதிதாக 4 ஆயிரத்து 100 பொலிஸாரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அரசிற்கு வைக்கப்பட்டுள்ளது.

இதுபோல், சுவீடனில் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகள் அதிக அளவில் குற்ற நடவடிக்கையில் ஈடுப்பட்டு வருவதால், தற்போது அரசு அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து பேசிய சுவீடன் உள்துறை அமைச்சரான Anders Ygeman 'பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட மற்றும் குடியமர்வு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட சுமார் 80 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்களை உடனடியாக அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். (இ)

### மரணத்துக்கு நீதி கேட்டு

## பேரணியாகச் சென்ற 60மாணவர்கள் கைது

ஐதராபாத் மத்திய பல்கலைக்கழக தலித் மாணவர் ரோகித் வெமுலா தற்கொலை செய்து கொண்டதால். இதற்குக் காரண மானவர்களை தண்டிக்க வேண்டும் என வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இது தொடர்பாக நீதி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. நீதி கிடைக்க தாமதமாவதாகக் கூறி டில்லியிலும் நேற்று முன்தினம் மாணவர்களின் போராட்டம் நடந்தது.

டில்லியில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்கள் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி வீட்டுக்கு பேரணியாக புறப்பட்டு சென்றனர். அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினார்கள். அதை மீறி பேரணியாக செல்ல முயன்ற 60 மாணவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

ஐதராபாத் பல்கலைக்கழகம் அருகில் 7 மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தனர். இதில் 6 மாணவர்களின் உடல்நிலை மோசமானதால் அவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். ஒரு மாணவர் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஷிகா வைரஸ் நோயைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் வேண்டும்

### அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு



(வோஷிங்டன்)

பிறக்கும் குழந்தைகளில் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடிய ஷிகா வைரஸை தடுக்கும் தடுப்பு மருந்துகள், அதற்கான சிகிச்சைகள் குறித்து விரைவாக கண்டு பிடிக்குமாறு அதற்குரிய தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கோரியுள்ளார்.

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகளை தாக்கும் கொடிய ஷிகா வைரஸ அமெரிக்கா கண்ட நாடுகளில் வேகமாக பரவிவருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. டெங்கு, சிக்கன்குனியா போன்ற நுளம்புகளால் பரவும் நோய்களை போலவே ஷிகா கிருமிகளையும் நுளம்புகள் மூலமே பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

வைரஸ் பரவியிருக்கும் நாடு ஒன்றில் இருந்து அமெரிக்கா திரும்பிய வெர்ஜினியாவை சேர்ந்த ஒருவருக்கு அந்த வைரஸ் இருப்பது கடந்த செவ்வாயன்று தெரிய வந்தது.

நுளம்பு மூலம் 'ஷிகா'வைரஸ் பரவுவதை அடுத்து 2018ஆம் ஆண்டு வரையில் பெண்கள் கர்ப்பம் தரிக்கவேண்டாம் என்று தென் அமெரிக்க நாடுகள் அறிவுரை வழங்கியுள்ளன.

இதேபோன்று, ஜமைக்கா, ஹண்டுராஸ் ஆகிய நாடுகளிலும் பெண்கள் கர்ப்பம் தரிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது..

பிறக்கும் குழந்தைகளில் குறைபாடுகளை ஏற்படுத்தக்கூடிய ஷிகா வைரஸை தடுக்கும் தடுப்பு மருந்துகள், அதற்கான சிகிச்சைகள் குறித்து விரைவாக கண்டு பிடிக்குமாறு அதற்குரிய தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கோரியுள்ளார். (இ)

## 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மமூத் யானையின் எலும்புகள் கண்டெடுப்பு

( வோஷிங்டன் )


அமெரிக்காவில் விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்தும்போது 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மமூத் யானையின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒரெகன் மாநிலத்தில் ஒரெகன் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

இந்த பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான காற்பந்தாட்ட மைதானத்தை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து அந்த பகுதியில் ஊழியர்கள் தோண்டும் முயற்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.



(கோப்புப்படம்)



அப்போது 10 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான மமூத் யானைகளின் எலும்புகளை அவர்கள் கண்டெடுத்தனர்.

உடலில் அதிக ரோமத்துடனும் உருவத்தில் மிகப்பெரியதுமான இருந்த மமூத் யானைகள் காலச்சுழற்சியில் அழிந்துபோயின என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சீன மீன்பிடிப் படகு கடலில் கவிழ்ந்தது 5 பேர் மாயம்

(சியோல்)

சீனாவைச் சேர்ந்த மீன்பிடி படகு ஒன்று தென் கொரியாவின் தெற்கு கடற்கரைப்பகுதியில் நேற்று முன்தினம் கவிழ்ந்தது.

தென் கொரியாவின் காஜியோ தீவிற்கருகே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த கொரிய கடற்படையினர் 5 பேரை மீட்டுள்ளனர். இதில் ஒருவர் குளிர்ந்த கடல் நீரில் மூழ்கியதால் சுய நினைவை இழந்துள்ளார்.

மேலும், படகில் இருந்த 5 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லையென கொரிய கடற்படையினர் தெரிவித்தனர். (இ)

# சுன்னாகம்-மயிலணி திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் (வடலியம்மன்) திருக்கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்-29.01.2016




### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

சகல செல்வங்களும் தந்தருளும் தெய்வ அன்னையாக மயிலணிப் பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு நவகுண்டபக்ஷ மஹாகும் பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா கைங்கர்யம் இன்றைய சுப முகூர்த்தத்தில் நடைபெறுவது உலக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.எனவே இப்பெருங் கைங்கரியத்தின் மூலம் அனைவ ருக்கும் சர்வவியாபினி ஸ்ரீ முத்துமாரித்தாயின் அருட்கடாட்சம் நிறைவாகக் கிடைக்க அன்னையைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

*லோகா சமஸ்தா சுகினோ பவந்-து*

**சிவஸ்ரீ நா.சிவசங்கரக்குருக்கள் ஆலய பிரதம குரு**



### வாழ்த்துச் செய்தி




ஈழநாட்டின் வடதிசையில் அமைந்துள்ள யாழ்.குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறந்தோங்கும் சுன்னாகம் எனும் நகரத்தில் மயிலணி எனும் பதியிலே அடியார்களுக்கு எல்லாம் அருள்பாலிக்க எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீமுத் துமாரியம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடை பெறுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகிறோம்.

இன்று மக்களை அவலப்படுத்திக் கொண்டிருக்கின்ற கஷ்டங்கள், துன்பங்கள், வறுமைகள் போன்றவற்றிலிருந்து எதிர்நீச்சல் அடிக்கும் வல்லமையினையும் அனைவரிடத்திலும் நன்மதிப்பை பெற்றிடவும் எல்லாத் துறையிலே இருக்கிறவர்களும் வளர்ச்சி பெற்று மேலோங்கிடவும் விவசாயம் வளர்ச்சி பெறவும் இந்த நாட்டிலே பொருளாதாரம் வளர்ச்சி பெற்று சாந்தியும் சமாதானமும் நிலைத்திடவும் மாணவர்கள் கல்வியிலே மேலோங்கி உத்தியோக வாய்ப்புக்கள் பெற்றிடவும் இந்த நாளிலே அம்பாளினுடைய நல்லாசிகள் கிடைக்க மனதார வேண்டுகின்றேன்.

**திரு.எம்.முகுந்தராஜ்**
**Branch Manager Jaffna Metro-02**
**Allianz Life Insurance Lanka LTD**

### நிர்வாக சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



அகிலம்அனைத்தையும் காத் தருளும் எங்கள் அன்னை முத்து மாரி அம்பாளுக்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுகின்ற இந்த இனிய வேளையில் இக் கும் பாபிஷேகத்திற்கு பலவிதமாகவும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது ஆலயத்தின் சார்பில் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது அன்னையின் பேரருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்*
*அன்னையைப் பணிந்தால் அதிக வரம் பெறலாம்.*

***இறைபணியில் ஐ.சிவலிங்கம்***

### ஸ்ரீ முத்துமாரி (வடலி) அம்மனின் வரலாறு

நிலவளம், நீர்வளம், ஆலயங்கள், பாடசாலைகள், கல்விமான்கள், சைவப் பெரியார்கள் இப்படிப் பல வளங்களும் நிறைந்த சுன்னாகம் எனும் நகரிலே மயிலணி எனும் புனித பதியிலே இற்றைக்கு முந்நூறு (300) ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ முத்துமாரி (வடலி) அம்மன் தேவஸ்தானம் அமைந்துள்ளது.

இவ்வாலயமானது பனை வடலிகளால் சூழப்பட்ட இடத்தில் ஓர் பெரிய ஒதிகை மர.ம் அந்த மரத்தின் கீழ் ஒரு கல் தான்தோன்றியாகக் காணப்பட்டது. இக்கல்லிலே அம்மன் இருப்பதைக் கண்டுணர்ந்த இக்கிராமத்தவர்கள் அவ்விடத்தில் விளக்கு வைத்து தினமும் வழிபட்டு வந்தார்கள். பனை வடலிகளால் சூழப்பட்ட இடத்தில் அம்பாள் அமைந்திருந்த மையால் இவ்வாலயம் வடலி அம்மன் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்வாறு வழிபட்டு வருகையில் அம்பா ளுக்கு சிறு ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என சில அன்பர்கள் சேர்ந்து ஆலோசித்து அம்பாளுக்கு சிறு ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ்வாறு சிறிது சிறிதாக வளர்ந்து அடியார்களின் ஒத்துழைப்பால் இன்று பெரிய ஒரு ஆலய மாக மிளிர்கின்றது. இவ்வாலயத்தில் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் குமாரசாமிப்புலவரின் பேர்த்தியான திருமதி மங் கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் சொற்பொழிவும் நடைபெற்று வருகிறது. இவ் ஆலயத்தில் இரண்டு நேரம் காலை 7 மணிக்கும் மாலை 4 மணிக்கும் தவறாது பூசை நடைபெற்று வருகிறது. தற்பொழுது நாகேஸ்வரக் குருக்கள் இல்லாத காரணத்தால் அவரது புத்திரர்களான சிவசங்கர சர்மா, சிவசுந்தரசர்மா, சிவமனோகர சர்மா ஆகியோர் மிகவும் பக்திபூர்வமாக பூசைகள் நடத்தி வருகிறார்கள்.

இவ் ஆலயத்தில் பல திருத்த வேலைகள் நடைபெற்று புதுப்பொலிவுடன் இன்று காலை 9.30 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

அனைத்து அடியார்களுக்கும் அம்பாளின் அருளாசி கிட்டட்டும்.

VFT Furniture & Multi Trades Centre
No.141, K.K.S.Road,
Chunnakam, Jaffna.
T.P: 021 224 2494

மலர் சிறப்புற வாழ்த்துவோர்
மலரமைப்பு:-
எஸ்.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்
செய்தியாளர்

லோகா சைவ உணவகம்
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்
T.P. 077 892 8619
077 838 5106

நெற் கலர் டிஜிற்றல் லாப் & வீடியோ, ஸ்ருடியோ
எமது சேவைகள்- அனைத்து அளவிலான போட்டோ பிறிண்டிங் (4R. 12X36) வெளிக்கள படப்பிடிப்பு, வீடியோ, அல்பம் வெண்டிங், டிசைனிங், கிளிஸ்ரல் டீறோ பிறேம் மேக்கிங், M.I.C. PassPort, Poster, படங்கள் 10 நிமிடத்தில் கொடுக்கப்படும்.
E-mail: Netdigitallab@ yahoo.com
134, கே.கே.எஸ்.றோட், சுன்னாகம். TP: 021 224 0766

Excellent Tex
No.59,61,
K.K.S. Road,
Chunnakam.
021 224 2261

Excellent Mother & Baby
No.57, K.K.S.Road,
Chunnakam
021 224 2261

பிள்ளையார் வெதுப்பகம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

துரை பேக் கவுஸ்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தம்பி மோட்டோர்ஸ்
பஜாஜ் சேவை முகவர்
உரிமையாளர்:
K.யோகராசா
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
T.P: 077 186 4808
021 224 2599

Mano Travels & Trades
No.141,
K.K.S. Road,
Chunnakam.

பிரவின் களஞ்சியம்
பல்பொருள் விற்பனை
நிலையம்
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

EUT Modern Furniture
69, K.K.S.Road,
Chunnakam.
021 224 0110/
077 656 6873
mail:srieut@gmail.com

# பழந்தமிழ் இலக்கியத்தை உலகறியச் செய்த சான்றோன்

தமிழ்மொழி உலக மொழிகளில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. உலகச் செம்மொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. ஒரு மொழியைச் செம்மொழி எனத் தகுதிப்படுத்துவதற்கு அம்மொழி காலத்தால் பழைமையான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். இந்த வரையறையுள் பண்டைத் தமிழிலக்கியங்கள் தமிழ் மொழியை செம்மொழியாகச் சிறப்புற வைத்தன. எனவே அந்த இலக்கியங்களைப் பற்றி இன்று பிறமொழியாளர் பலர் தேடல் செய்து வருகின்றனர். அவர்கள் தேடும் இலக்கியங்கள் இன்று மின்நூல்களாக உள்ளன. ஆனால் இந்நூல்கள் பண்டைக் காலத்தில் ஏட்டுச் சுவடி நூல்களாகவே இருந்தன. அவற்றை எடுத்துப் படிப்பது எளிதன்று. தமிழ் மொழியின் வரிவடிவ அமைப்பும் எழுத்துமுறையும் அறிந்தவரே அவற்றைக் கற்க முடிந்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை என்பவர் செய்த நற்பணியால் பழந்தமிழ் இலக்கியங்கள் ஏட்டுவடிவிலிருந்து நூல் வடிவம் பெற்றன.

இந்தச் சான்றோன் சி.வை. தா. எனச் சுருக்கமான பெயரால் அழைக்கப்பட்டவர். வட்டுக்கோட்டை சர்வ சாத்திரசாலையின் மாணவர் புலம்பெயர்ந்து தமிழ்நாடு சென்று கல்வியைத் தொடர்ந்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதற்பட்டதாரி புதுக்கோட்டையிலே நீதிபதியாகப் பணி புரிந்தவர். பிரித்தானிய அரசினால் 'இராவ்பகதூர்' என்னும் பட்டம் வழங்கப் பெற்றவர். இருமொழிப் புலமையாளர் தான் பெற்ற மரபான தமிழ்க்கல்வியையும் ஆங்கிலக் கல்வியையும் துணையாகக் கொண்டு புதியதொரு தமிழ்ப்பணியை முன்னெடுத்தவர். நாவலர் வழியில் தமிழ்ப் பணியைச் செய்தவர். பிறப்பினாலே கிறிஸ்தவராக இருந்தபோதும் தனது அறிவின் தெளிவினால் சைவராக மாறி இறுதிவரை வாழ்ந்தவர்.



இவருடைய சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகை என்னும் நூல் பதிப்பிக்கப்பட்ட போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தென்னகத் திலே பதிப்புலகின் தந்தையெனப் போற்றப்படும் உ.வே. சாமிநாதையருக்கு முன்னரே சங்க இலக்கிய ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து நூல் வடிவாக்கிய சி.வை. தா.பதிப்புலகமேதை எனப் புகழ் பெற்றார். உ.வே. சாமிநாதையர் கலித்தொகை வெளிவந்த பின்னரே புறநானூறு என்னும் சங்கத்தமிழ்நூலை ஏட்டு வடிவிலிருந்து நூல் வடிவாக்கினார். தென்னகத் தமிழறிஞர்களைப் பண்டைத் தமிழிலக்கியங்கள் பற்றிய தேடலுக்கு ஆற்றுப்படுத்தியவர் சி.வை.தா. என்றால் மிகையாகாது.

19ஆம் நூற்றாண்டில் பிறமொழியாகிய ஆங்கிலமொழிக் கல்வி விரைவாக மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றிருந்த வேளையில் சி.வை. தாவின் தமிழ்ப்பணி தமிழ்மொழியின் பழைமையையும் ஆற்றலையும் தனிச் சிறப்பையும் அனைவரும் உணரவழி செய்தது.

ஆங்கிலம் கற்ற பல தென்னகத் தமிழறிஞர்கள் பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்விலே ஈடுபட்டனர். சி.வை. தா. இலக்கண நூல்களான தொல்காப் பியம், வீரசோழியம் போன்ற நூல்களையும் பதிப்பித்தமையால் இலக்கணம் பற்றிய தேடல்களும் ஆய்வுகளும் தோன்றின.

இன்று தமிழ்மொழி பற்றிய ஆய்வு தமிழியல் ஆய்வு எனப் பரந்துபட்டுள்ளது. இந்நிலையில் நமது இளைய தலைமுறை நமது நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றியறிய வேண்டும். கற்கைநெறி என்னும் வரையறைக்கு அப்பால் தமிழ்மொழிப் பேணல் என்ற கடமை நிலையில் அவர்கள் பணியாற்ற வழிகாட்ட வேண்டும். தமிழாய்வுகளை உயர்பட்ட நெறிக்காகச் செய்து அந்த ஆய்வேடுகளைக் கிடப்பிலே போடாமல் அவற்றை நூல்களாக்கி வெளியிட வேண்டும். பல்கலைக்கழகங்கள் இதற்கான வாய்ப்புகளை வழங்கவேண்டும்.

எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியைப் பேணுவதற்கான சூழல் தனக்கில்லாத போது புலம்பெயர்ந்து சென்ற சி.வை. தா. தனது கல்வியையும் சூழலையும் வாய்ப்பையும் பயன்படுத்தி அயராது பணி செய்தார். அவருடைய வாழ்வு தமிழர்க்கெல்லாம் வழிகாட்டுவது. அன்று சி.வை.தா. சங்க இலக்கியத்தை ஏட்டிலிருந்து நூலாக்கியிராவிட்டால் அவை மண்ணோடு மண்ணாகி அழிந்திருக்கும்.

இன்று எல்லாமே கணனிக்குள் இருக்கிறது. என்று அசமந்திருக்க வேண்டாம். நூலைக் கையிலெடுத்துப் படிக்கும் கற்கையும் ஒன்று உண்டென்பதை மறக்க வேண்டாம். அதனை நினைவூட்ட சி.வை. தா.வை. நினைவு கூருவோம்.

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

# வாக்காளர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்துள்ளது

## தேர்தல்கள் திணைக்களம் தகவல்

கடந்த வருடத்தை விட வாக்காளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களம் தெரிவிததுள்ளது.

அதாவது கடந்த வருடம் வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 54இலடசத்து 21ஆயிரத்து 201 ஆக காணபபட்டதோடு 2014 ஆம் ஆண்டு இதன் எண்ணிக்கை ஒரு கோடியே 50 இலட்சத்து 47 ஆயிரத்து 490 ஆக காணப்பட்டதாகவும் தேர்தல்கள் திணைககளம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அத்துடன் இந்த வாககாளர் எண்ணிக்கையில் இந்த வருடம் பாரிய அதிகரிப்பு காணப்படுவதோடு இதன எண்ணிக்கை 3 இலட்சத்து 73 ஆயிரத்து 712 ஆக அதிகரித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் பட்டியல் மூலம் இந்த நாட்டில் அதிகமாக வாக்களிக்க தகுதியானவர்கள் இருக்கும் இடமாக கம்பஹா காணபபடுவதாகவும், ஒரு இலட்சத்து 68ஆயிரத்து 887 வாககாளரகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த வருடம் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் பட்டியலின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் வாக்களிக்க தகுதியானவர்கள் ஒரு இலட்சத்து 64ஆயிரத்து 946 என்றும், மிகவும் குறைவான வாக்காளர் பதிவான மாவட்டமாக வன்னி மாவட்டம்காணபபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

| தேர்தல் மாவட்டம் | 2014 | 2015 | வித்தியாசம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 529,239 | 539,641 | 10,402 |
| வன்னி | 253,058 | 263,201 | 10,143 |
| மட்டக்களப்பு | 365,167 | 375,906 | 10,739 |
| திகாமடுல்ல | 465,757 | 478,006 | 12,249 |
| திருகோணமலை | 256,852 | 264,368 | 7,519 |

## தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து

களனி பிரதேசத்தில் அமைநதுள்ள டயர் தொழிற்சாலையொன்றில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

களனி, வராகொடை பிரதேசத்தில அமைந்துள்ள குறித்த தனியார் தொழிற்சாலை இலங்கையின் மிகப் பெரிய டயர் தொழிற்சாலைகளில் ஒன்றாகும்.

நேற்று முன்தினம் நண்பகல் குறித்த தொழிற்சாலையில் பாரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டுள் ளது.

பேலியாகொடை நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் கடும் போராட்டத்தின் மத்தியில் தீயை அணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு வண்டிகள் ஸ்தலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

சம்பவ இடத்தில் பெருமளவில் பொதுமக்களும் கூடியுள்ள நிலையில், தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# செய்தித் துளிகள்

## பிக்குகளின் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றினாராம் ஞானசார தேரர்

(கொழும்பு)

பிக்குகள் மீது சுமத்தப்பட்டுள்ள வரலாற்றுக்கடமையை ஞானசார தேரர் நிறைவேறறியுள்ளதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கண்டிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் கலகம அத்ததஸ்ஸி மகாநாயக்க தேரரையும் அவர் சந்தித்திருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

## ஓய்வுபெற்ற இரண்டு நீதியரசர்கள் வாகனங்களை கையளிக்கவில்லை

தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் இரண்டை அண்மையில் ஓய்வுபெற்ற நீதியரசர்கள் இருவர், மீண்டும் கையளிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதியரசர்களின் கடமைகளுக்காக வழங்கப்படும் வாகனங்களை, அவர்கள் ஓய்வு பெறும்போது, மீளவும் கையளிக்க வேண்டியது சாதாரண சம்பிரதாயமாகும். எனினும், அண்மையில் ஓய்வுபெற்ற நீதியரசர்கள் இருவரும், தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களையும் மீளவும் கையளிக்கவில்லை .

வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக தங்களுக்கு வழங்கவேண்டிய அனுமதிப்பத்திரத்தை வழங்கினால் மட்டுமே, இவ்விரு வாகனங்களையும் தாங்கள், அந்த நிறுவனத்துக்கு மீளவும் கையளிப்போம் என்று ஓய்வுபெற்ற நீதியரசர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## ஆசிரியைக்காக மரத்தில் ஏறிய மாணவன் வைத்தியசாலையில்!

பலாமரத்திலிருந்து விழுந்து பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - பெல்மடுல பிரதேசத்தின் தெனவக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 14 வயதான விஸ்வநாதன்விராஜ என்ற மாணவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவனை பாட சாலையின் ஆசிரியை ஒரு வரே பலாமரத்தில் ஏறி பலாக்காய் பறித்துத் தருமாறுகோரியதாகவும்இதனை அடுத்தே இந்த மாணவன் மரத்தில் ஏறி விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஈழஅகதிகள் 470 பேர் நாடு திரும்பியுள்ளனர்

2015ஆம் ஆண்டிலிருந்து, இவ்வாண்டு ஜனவரி 26ஆம் திகதி வரையிலும் தமிழ் அகதிகள் 470 பேர், தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் 64 ஆயிரம் பேர் இன்னும் இருக்கின்றனர் என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து இறுதியாக, கடந்த 26ஆம் திகதியன்று 20 அகதிகள் நாடு திரும்பியுள்ளனர். அந்த 20 பேரில், 12 ஆண்களும் 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர். (இ)

## 50 கிலோகிராம் வெண்சந்தன கட்டைகளுடன் இருவர் கைது

பதுளை-துங்கிந்த நீர்வீழ்ச்சிப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட வெண்சந்தனக் குற்றிகள் 50 கிலோகிராம் மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரிதீபான என்ற இடத்தில் வைத்தே நேற்று முன்தினம் மாலை மேற்படி சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அச்சந்தனக் குற்றிகளை கைப்பற்றியதுடன் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சகோதரர்கள் இருவரை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட 50 கிலோகிராம் வெண்சந்தனக் குற்றிகளை, பதுளை பொலிஸார் பரிசீலனை செய்வதோடு, இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களையும் மேற்கொண்டுள்ளனர். (இ)

# நீதிமன்ற உத்தரவிற்கு பணிந்து வவுனியா மாணவர்கள் குற்றங்களில் ஈடுபடவில்லை

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் புகழாரம்



(குருமன்காடு)

நீதிமன்ற உத்தரவுக்குப் பணிந்து வவுனியா மாணவர்கள் குற்றங்களில் ஈடுபடுவதோ, வீதியில் நிற்பதோ இல்லை என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன் புகழாரம் சூட்டியுள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் 2002 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பு பழைய மாணவர்களால் அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான வாயிலைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், வவுனியா மண் எனக்கு வாழ்வு கொடுத்த மண், நீதித்துறைக்கு வாழ்வு கொடுத்த மண். இந்த மண்ணுக்கு நான் செய்யக்கூடிய சேவைகள் அனைத்தையும் வவுனியாவில் கடமையாற்றிய காலத்தில் செய்யக் கூடியதாக இருந்தது.

2000 ஆம் ஆண்டு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பொற் காலமாகும், கல் விச் சாதனைகளில் சிகரத்தை தொட்ட காலம், மருத்து வர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள் என பட்டதாரிகள் பலரை உருவாக்கிய காலம். இந்த வகையில் இந்த கல்லூரியின் சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

சாதனை புரிவது பெருமையல்ல. அந்த சாதனைக்கு எடுத்துக்காட்டாக எடுத்தியம்பியவர்கள் தான் 2002 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள்.

நான் கடமையாற்றிய காலத்தில் எந்தவொரு மாணவனும் துப்பாக்கி பிரயோகத்தில் இறந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். (2-250)




## காசோலை கையளிப்பு

(பனிக்கன்குளம்)

பண்டிவிரிச்சான் பாடசாலையில் அமைக்கப்பட்ட குடிநீர் தாங்கித் தொகுதிக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

மடு கல்வி வலயத்துக்கு குடிநீர் தாங்கி அமைப்பதற்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனினால் 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு ஏற்கனவே கடந்த ஆண்டு திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதற்கான காசோலையினை மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் வைத்து பாடசாலையின் பிரதி அதிபரிடம் உத்தியோகபூர்வமாக அமைச்சர் கையளித்தார். (2-281)

# வள்ளுவர் பண்ணைப் பாலம் எப்போது திருத்தம் செய்யப்படும்

## அச்சத்துடன் பயணிப்பதாக பொதுமக்கள் தெரிவிப்பு



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் வள்ளுவர் பண்ணைக் கிராமத்துக்கான பிரதான வீதியில் கடந்த 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு மீற்றர் அகலமும் 25 மீற்றர் நீளமும் கொண்ட தற்காலிக பாலமானது சேதமடைந்து காணப்படுவதால் பொது மக்கள் போக்குவரத்தின் போது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கமோ அல்லது கிராம சேவையாளரோ அக்கறை காட்டாமல் இருப்பதாக அப்பகுதிக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


இக் கிராமத்தில் 70 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அத்துடன் தமது அடிப்படைத் தேவைகளுக்காக இந்தப் பாலத்தினைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது.

ஆனால் இந்தப் பாலத்தினூடாக மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் ஆகியவற்றில் மட்டுமே செல்ல முடியும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனைப் பார்வையிடும் அதிகாரிகள் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தாம் இந்தப் பாலத்தினூடாக அச்சத்துடன் பயணிப்பதாகவும் இதனால் அதனை விரைவில் புனரமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-3-299)

# தேகாரோக்கிய தேசிய வாரத்தில் உடல் நலன் குறித்து செயலமர்வு



(பனிக்கன்குளம்)

நாட்டிலுள்ள மக்களை சுகாதார மிக்க தேகாரோக்கிய மான மக்க ளாக வலுவூட்டுவதற்கு விளை யாட்டு அமைச்சு ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கமை வாக 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை "விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரம்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 25 ஆம் திகதி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலயத்தில் செயலமர்வு இடம்பெற்றது.

இதன்போது தொற்றா நோய்களைத் தவிர்த்துக் கொள்ளல் மற்றும் தேகாரோக்கியத்தை பேணுதல் போன்றவற்றில் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர் பாக குறுகிய விரிவுரை ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும் சிறந்த தேகாரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக பின்பற்றக்கூடிய பயிற்சித் தொகுதியை அறிமுகப்படுத்தல், செயல் முறையினை செயற்படுத்தல், பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவம் சம்பந்தமாக மீளாய்வு செய்தல் மற்றும் சிறந்த பழக்கங்களாக நாளாந்தம் இவ்விடயங்களை நிறைவேற்றுவதற்காக அவர்களை ஊக்குவித்தல் எனும் அடிப்படையில் இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவ ட்ட இளைஞர் சேவை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது போன்ற நிகழ்வுகள் நாட்டின் பல்வேறு திணைக்களங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மேய்ச்சல் நிலங்கள் பற்றாக்குறை முல்லைத்தீவில் கால்நடைகள் அவதி

## இணைத்தலைவர்களுக்கு சுட்டிக்காட்டு

(மாமூலை)

கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான பல குற்றச்சாட்டுகள் அண்மைக்காலமாக அதிகரித்துக் கொண்டு செல்கின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட கால்நடை வளர்ப்புச் சங்கங்களின் தலைவரினால் முல்லை. மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப்போல மேய்ச்சல் நிலங்கள் முல்லைத் தீவுப் பிரதேசங்களில் இன்மையாகும்.

தற்போது காலபோகப்பயிர்ச் செய்கை இடம்பெறுவதால் கால்நடைகளின் நிலைமை மேலும் மோசமானதாகவுள்ளது.

வனப்பகுதிகளிலும் வனவளப் பகுதியினர் எல்லைகளை வரையறுத்துக்கொண்டு வருகின்றனர். இதனால் கால்நடைகள் அழிவடையக கூடிய சூழலே காணப்படுகின்றது.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை அமைப்பதற்கு அரச வனப்பகுதியாகவுள்ள இடங்களில் மேய்ச்சல் நிலங்கள் அமைக்க ஆவன செய்யுமாறு கால்நடை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-301)






முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக்கு 20 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தொகுதியினை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் திறந்து வைத்தார். இதன்போது மயிலாட்டம்,கும்மியாட்டம் மற்றும் தமிழ்ப் பாரம்பரிய கலை அம்சங்களோடு விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. கட்டட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டதோடு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் விருந்தினர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அனுர பிரியதர்சன யாப்பா பதவியைத் துறக்கத் தயார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானிக்கும் எந்தவொரு நேரத்திலும் அமைச்சுப் பதவியை துறகத் தயார் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, டார்லி வீதியில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் மத்திய செயற்குழுவின் பூரண அனுமதியுடனேயே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் அமைச்சுப் பதவி நிரந்தமானதல்ல.

வேறு வேலை செய்ய முடியாது என்பதாலோ அல்லது பணம் சம்பாதிப்பதற்காகவோ நாம் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கவில்லை.

எந்தவொரு நேரத்திலும் இந்தப் பதவிகளை எம்மால் கைவிட முடியும். கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்த காரணத்தினால் ஏற்றுக் கொண்ட அமைச்சுப் பதவியை கட்சி தீர்மானிக்கும் எந்த நேரத்திலும் துறக்கத் தயார் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 28.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.03 | 146.07 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.69 | 208.89 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.64 | 159.82 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.90 | 144.73 |
| டொலர் | கனடா | 100.08 | 104.18 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.03 | 103.73 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.83 | 102.65 |
| ரூபா | இந்தியா | 2.1122 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.9739 |
| குவைத் | டினார் | 473.8917 |
| ஓமான் | ரியால் | 373.7104 |
| கட்டார் | ரியால் | 39.5349 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3813 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1776 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 130 | 140 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 55 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 350 | 350 | 400 |
| தக்காளி | 60 | 60 | 60 | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 90 | 80 | 120 | 100 |
| கரட் | 150 | 200 | 140 | 180-300 | 200 | 200 |
| பூசணி | 50 | 60 | 40 | 60 | 80 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 50 | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 120 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 100 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 150 | 100 | 165 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 160 | 250 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 800 | — | 800 | 600 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 | — | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 50 | 120 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 110 | 100 | 160 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 40 | 50 | — | 80 | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணம் சென்ற ரெயிலை நிறுத்தி 100 தமிழர்கள் சுட்டுக்கொலை 91

...யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ரெயிலை நிறுத்தி 100 தமிழர்களைச் சிங்கள இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்.

சில தினங்களுக்கு முன்பு தொண்டமனாறு தொடங்கி பருத்தித்துறை வரை சிங்கள இராணுவ வீரர்கள், தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் டாங்கிகளை மோதச்செய்து வீடுகளைத் தரைமட்டமாக்கினார்கள். இதில் 200 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகும் கல்வியங்காடு என்ற ஊரில் புகுந்து தமிழர்களை இராணுவ வீரர்கள் வீட்டைவிட்டு துரத்தினார்கள். ஒரு தமிழ்ப்பெண்ணை 10 இராணுவத்தினர் கற்பழித்துக் கொன்றனர்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு விடுதலைப்புலிகள் கொதித்தெழுந்தனர். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் அனுராதபுரம் சென்று குண்டு வீசியும் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 148 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர்.

### ரெயிலை நிறுத்தி 100 தமிழர்கள் கொலை

இதன் காரணமாகச் சிங்களவர்களுக்கு மேலும் கொலை வெளி ஏற்பட்டது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுராதபுரம் வழியாகத்தான் ரெயிலில் செல்லவேண்டும். அனுராதபுரத்தைத் தாண்டி கொழும்புக்கோ, யாழ்ப்பாணத்திற்கோ செல்லும் தமிழர்களைப் பழி தீர்க்க இலங்கை இராணுவ வீரர்கள் திட்டமிட்டனர்.

இதன்படி 1985 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி பிற்பகல் 3 மணி அளவில் கொழும்பு நகரில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரெயிலைச் சிங்கள இராணுவத்தினர், அனுராதபுரத்தில் தடுத்து நிறுத்தினார்கள். பிறகு ஒவ்வொரு பெட்டியாகச் சோதனை நடத்தி தமிழர்களை வெளியே இழுத்துக்கொண்டு வந்தனர்.

பெண்கள், குழந்தைகள், முதியோர் என்று பாராமல் அந்த ரெயிலில் வந்த தமிழர்களை எல்லாம் பறவையைச் சுடுவதைப் போல துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார்கள். இதில் 100 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியானார்கள். அனுராதபுரம் ரெயில் நிலையத்தில் எங்கு பார்த்தாலும் பிணக்குவியல் காணப்பட்டது.

### தீ வைப்பு

இதன்பிறகு சிங்கள இராணுவத்தினர், அனுராதபுரத்தில் உள்ள தமிழர்களின் 5 கடைகளைச் சூறையாடி தீ வைத்தனர். கத்தியால் குத்தி 17 தமிழர்களைக் கொன்றனர்.

இந்தக் கலவத்தைத் தொடர்ந்து கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே எந்தவித தகவல் தொடர்பும் இல்லை. டெலிபோன் வசதி துண்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நகரம் தனியாகத் துண்டிக்கப்பட்டது. தமிழர்கள் வாழும் பகுதிகள் ஆள் நடமாட்டம் இல்லாமல் வெளிச்சோடிக் கிடந்தன.

### விடுதலைப்புலிகள் பதிலடி

வில்பாட்டு என்ற காட்டுப் பகுதியில் வனவிலங்கு பாதுகாப்பு நிலையம் உள்ளது. அந்தப் பகுதியில் பதுங்கி இருந்த தமிழர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்த வந்தனர். அப்போது அவர்கள் மீது விடுதலைப்புலிகள் சுட்டதில் 23 இராணுவ வீரர்கள் செத்தனர்.

இலங்கையின் கடலோர மாவட்டமான திருகோணமலையில் உள்ள கச்சவேலி பொலிஸ் நிலையத்தின் மீதும் அதை அடுத்துள்ள கடற்படைத் தளத்தின் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இந்தச் சம்பவம் ஜூன் 2 ஆம் திகதி நடந்தன.

விடுதலைப்புலிகளுக்கும் பொலிசாருக்கும் இடையே பயங்கரத் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 30 சிங்கள வீரர்கள் கொல்லப்பட்டனர். சண்டையின் உச்சக் கட்டத்தின்போது பொலிஸ் நிலையத்தின் மிது ராக்கெட்டுக்களை வீசி விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில்பொலிஸ் நிலையம் இருந்த இடம் தெரியாமல் தரைமட்டமானது. பொலிஸ் நிலையத்தில் இருந்த ஏராளமான ஆயுதங்களையும் துப்பாக்கிகளையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

### பஸ் கடத்தல்

இந்த சம்பவம் நடந்த மறுநாள் தமிழர்கள் பயணம் செய்த பஸ்சைச் சிங்கள இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இந்தச் சம்பவம் திருகோணமலை துறைமுகம் அருகே உள்ள தன்குளம் என்ற இடத்தில் நடந்தது.

அந்த பஸ் திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்குச்சென்று கொண்டிருந்தது. அதில் 75 தமிழர்கள் பயணம் செய்தனர். தன்குளம் அருகே அந்த பஸ்சை இலங்கை இராணுவ வீரர்கள் 8 பேர் வழிமறித்து நிறுத்தினார்கள். துப்பாக்கியால் டிரைவரை மிரட்டி காட்டுப் பகுதிக்கு பஸ்சை ஓட்டிச் செல்லுமாறு பணித்தார்கள்.

காட்டுக்குள் சென்றதும் பயணிகளிடம் இருந்த பணம், நகை ஆகியவற்றைப் பறித்தனர். பிறகு அனைவரையும் வரிசையாக நிறுத்து குருவிகளைச் சுடுவதைப்போல சுட்டுத்தள்ளினார்கள். இதில் குண்டு பாய்ந்து டிரைவர் உட்பட 17 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயம் அடைந்தனர். மற்றவர்கள் காட்டுக்குள் ஓடி உயர் தப்பினார்கள்.



(தொடரும்)

# ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை வாங்குகிறது இலங்கை கடற்படை

(கொழும்பு)

**போருக்குப் பிந்திய கடல்சார் செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில், இலங்கை கடற்படையில் இரண்டு புத்தம் புதிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர்,

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் இந்தப் போர்க்கப்பல்களின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு கப்பல் விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது கப்பல் அடுத்த ஆண்டு இறுதியில் கிடைக்கும்.

இலங்கை கடற்படையிடம் தற்போது, சயுர, சமுத்ர, சாகர என மூன்று போர்க்கப்பல்கள் மாத்திரம் உள்ளன.

கடந்த காலங்களில் தீவிரவாத செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக நாம் சிறிய போர்க்கப்பல்கள் மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகளில் மாத்திரம் கவனம் செலுத்தினோம.

இலங்கை கடற்படையைத தரமுயர்த்தும், ஸ்ரீலங்கா கடற்படை 2020-25 திட்டத்தின் கீழ், இலங்கை கடற்படை கோவாவில் தற்போது கட்டப்படும் இரண்டு போர்க்கப்பல்கள் உள்ளிட்டதாக, மேலும் 10 புதிய போர்க்கப்பல்கள் சேர்த்துக் கொள்ளப்படும.

இலங்கைக்கு வரும், ஐ.என்.எஸ். விக்கிரமாதித்யா போன்ற வெளிநாட்டுப் போர்க்கப்பல்களால், இலங்கை கடற்படைக்கு பயிற்சி வாய்ப்புகள் கிடைக்கின்றன.

விக்கிரமாதித்யா போன்ற பாரிய போர்க்கப்பல்கள், கடந்த காலங்களில் கொழும்புத் துறைமுகத்துக்குப் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது.

கொழும்பு தெற்கு இறங்குதுறை 18 மீற்றர் ஆழத்தில் விரிவாக்கப்பட்டுள்ளதால், பாரிய போர்க்கப்பல்கள் தரித்து நிற்கும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு ஜுலை மாதத்துக்குப் பின்னர், ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், ஓமான், கட்டார், பாகிஸ்தான், தென்கொரியா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் 25 போர்க்கப்பல்கள் இலங்கை வந்துள்ளன.

மேலும், அடுத்த சில மாதங்களில், பிரித்தானியா, தென்னாபிரிக்கா, ஓமான், மலேசியா, நைஜீரியா ஆகிய நாடுகளின் ஆறு போர்க்கப்பல்கள் கொழும்பு வரவுள்ளன.

ஒவ்வொரு நாடும், தமது போர்க்கப்பல்களை அனுப்பும் போது, அதற்குத் தேவையான பாதுகாப்பை, அந்த நாடு வழங்குமா? என்பதைப் பார்த்த பிறகே அனுப்புகின்றன.

அந்த வகையில் இலங்கை கடற்படை மீது, அனைத்துலக நாடுகள் மத்தியில், சிறந்த மரியாதை உள்ளது.

அதனையிட்டு நாம், பெருமைப்பட வேண்டும். கடற்படைப்பயிற்சிநிலையமொன்றை, இலங்கையில் நிறுவுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

எனினும், இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிசெயத பின்னரே, அது பற்றிச் சிந்திக்க முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இன்னொரு நாட்டினது தேவைகளுக்கு ஏற்ப வெளியுறவு கொள்கையை வகுக்கக்கூடாது

### நல்லாட்சி அரசுக்கு நாமல் அறிவுரை



ஒருநாட்டின் வெளியுறவுக் கொள்கை பிறிதொரு நாட்டின் தேவைக்கு அமைய வகுக்கப்படக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது தேசியப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துடன் பிணைந்திருக்க வேண்டும்.

எமது அரசாங்க ஆட்சிக் காலத்தில் புதிய தூதுவராலயங்களை அமைத்து உலகின் பல நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக்கொண்டோம்.

அதேபோன்று நாம் மரபு ரீதியான நட்பு நாடுகளுடனும் சுமுகமான உறவுகளைப் பேணி வந்தோம்.

எமது நாட்டின் மக்களது நலனுக்காக வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

போர்க் குற்றச் செயல் விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதவான்கள் அவசியம என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். அவ்வாறான நீதிமன்றங்கள் உருவாக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி கூறுகின்றார். இந்த இரண்டில் எது உண்மை என்பதனை தெரிந்து கொள்ள விரும்புகின்றோம்.

நாடு என்ற ரீதியில் சீனா போன்ற நாடுகளுடன் சிறந்த உறவினைப்பேணவேண்டும்.

தேர்தல்காலத்தில் போர்ட் சிட்டி திட்டம் விமர்சனம் செய்யப்பட்டது. எனினும் தற்போது அவை நல்ல திட்டங்களாக மாற்றமடைந்துள்ளன என நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவிததுள்ளார். (இ)

## மகிந்தவிற்கு கிராம மட்டத்தில் அதிகளவில் ஆதரவு உள்ளது

### தயாசிறி தெரிவிப்பு

கிராம மட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அதிகளவு ஆதரவு காணப்படுவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முந்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேலும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டினதும், கட்சியினதும் தலைவராக மைத்திரிபால சிறிசேன திகழ்கின்றார் என்றபோதிலும், கிராம மட்டத்தில் மகிந்தவிற்கு அதிக செல்வாக்குக் காணப்படுகின்றது.

இந்த இருவரும் இணைந்து ஒரு பயணத்தை ஆரம்பித்தால் கட்சிக்கு பாரியளவில் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடியும்.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க கடமையாற்றிய போதிலும், பிரபல்யமான தலைவராக சஜித் பிரேமதாச திகழ்ந்தார்.

இந்த இருவரும் வெவ்வேறு பாதைகளில் சென்றதனால் ஓர் நிகழ்ச்சியில் கூட ஒன்றாக அமர்ந்து இருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

எனினும், விரும்பியோ விரும்பாமலோ இருவரும் ஒன்றிணைந்து கடந்த தேர்தலின் போது செயற்பட்டதனால் ஏனைய கட்சிகளை விடவும் கூடுதல் ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதன் போது பிரபல்யமான தலைவரான சஜித் பிரேமதாச ஒரு அடி பின்னோக்கி நகர்ந்தார்.

இதேபோன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றியடைச் செய்ய வேண்டுமாயின் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவும் பிரபல்யமான தலைவரான மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### கவலையே வேண்டாம்

எதிரே சடாரென்று ஒரு வாகனம் வந்துவிட்டது என்பதற்காக என்ன செய்வதென்று தெரியாமல் அயர்ந்து போய் நின்று கொண்டிருந்தால் என்ன ஆகும்? சட்டென்று விலகவோ வேறுவழிகளைத் தேடவோ முற்பட வேண்டாமா?

சிலர், கவலைகளைச் சந்தித்ததும் அப்படியே அயர்ந்து போய்விடுவார்கள். அதற்கு வழிகாணவும் முயல்வதில்லை. கவலையெனும் வாகனம் அவர்மீது மோதி அவர் மனத்தைச் சின்னாபின்னமாக்கி விடுகிறது.

**கவலைகளில் இரண்டு பிரிவுகள்**

தீர்க்க முடியாத கவலைகள்.

தீர்வு காணக்கூடிய கவலைகள்.

தீர்க்கவே முடியாத கவலை என்பது என்ன தெரியுமா? உயிரிழப்பு ஒன்றுதான். மற்ற எந்தக் கவலையாக இருந்தாலும் அதை நம் திறமையினால் சமாளித்து விடலாம்.

தீர்க்கவே முடியாத கவலை கூடக் கொஞ்ச நாளாகி விட்டால் சரியாகிவிடும்.

தீர்க்கவே முடியாத கவலைகள்கூட சாதாரணமாகிவிடும் போது தீர்க்கக்கூடிய கவலைகள் எம்மாத்திரம்!

ஆனால் ஒன்று மட்டும் உறுதி.

கவலைகளைக் கண்டு நாம் அச்சம் அடைய அடைய அவை பெரிய கவலைகளாக, பூதாகாரப் பிரச்சினைகளாக உருவெடுக்கின்றன. அதேநேரத்தில், துணிவுடனும் திறமையுடனும் அணுகும் போது அக்கவலைகள் சக்தியற்றனவாக ஆகிவிடுகின்றன.


முயற்சியில் தோல்வி அடைபவர்கள் கவலை கொள்வது சகஜம். முயற்சி என்பது காசைச் சுண்டிப் போடுவது மாதிரி. தலை விழுந்து வெற்றி காண்பதும் பூ விழுந்து தோல்வி காண்பதும் நம் கையில் இல்லவே இல்லை.

எதற்கும் நாம் தயாராகிவிடுவது தான் கவலையிலிருந்து விடுதலை பெற சிறந்த வழியாகும். கவலை என்னும் தீய பொருளுக்கு உடல் நலம் என்னும் அரும் பொருளை விலையாகக் கொடுக்கிறீர்கள் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். எந்தக் கவலைகள் மனதில் தோன்ற ஆரம்பித்தாலும் அவற்றிற்கான சிந்தனையில் இறங்கி விடிவு காண வேண்டும். நிச்சயம் வழி பிறக்கும்.

இப்படி ஆகிவிட்டதே! அப்படி ஆகிவிடுமோ? என்றெல்லாம் எண்ணுவதை விடுத்து, இனி என்ன செய்யலாம்? என்று எண்ணுவதே நலம் பயக்கும். நடந்து விட்ட கவலை தரக்கூடிய விடயங்களைத் தீய கனவுகளாக எண்ணிக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். அந்தப் புதைவிடத்தின் மேலே அனுபவம் என்னும் துணையுடன், நம்பிக்கை என்னும் அரும்புகள் மலரச் செய்ய வேண்டும்.

கவலைகள் என்பன ரயில்கள் மாதிரி. அவை வாழ்க்கை என்னும் ஸ்டேசனுக்கு அடிக்கடி வரும் போகும். ஸ்டேசன் மாஸ்டராக இருந்து நாம் அவற்றை வரவேற்கவும் வழியனுப்பவும் தயாராகிவிடவேண்டும். அந்த மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ளாவிட்டால் ஏகப்பட்ட ரயில்கள் ஸ்டேசனில் சேர்ந்துவிடும்! பின்னர் பிரச்சினைகளுக்குக் கேட்கவா வேண்டும்.

லேனா தமிழ்வாணன்





# சிறுவர் அரங்கம்

1346

## திருந்திய எழிலன்!

எழிலனின் தந்தை கல்லுடைக்கும் தொழிலாளி. வெயிலில் மாதம் முழுவதும் உழைத்தாலும்கூட அவருக்கு மாத வருமானம் மிகவும் குறைவுதான். அந்த வருமானத்திலேயே அவர் குடியிருக்கும் வீட்டுக்கு வாடகையும் கொடுக்க வேண்டும். உணவு மற்றும் இதரச் செலவுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும். தான் படும் கஷ்டங்களைத தன்மகன் படக்கூடாது என்பதற்காக எழிலனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என எண்ணினார்.

எழிலன் எட்டாம் வகுப்பு படித்து வந்தான். ஏதோ பள்ளிக்குப் போகிறோம் என்ற கடமைக்காக அவன் பள்ளிக்குப் போவானே தவிர, ஒழுங்காகப் படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற அக்கறை அவனுக்குச் சிறிதுகூட இல்லை.

பள்ளியில் சிறிதுநேரம் இருப்பான். பிறகு, வெளியில் கிளம்பிவிடுவான். சில மாணவர்களுடன் சேர்ந்து ஊர்சுற்றியும், அருகிலிருந்த திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படம் பார்த்தும், வயதான பெரியவர்களைக் கேலியும், கிண்டலும் செய்தும், பொய் பேசியும் வீணாக பொழுதைப் போக்கி வந்தான். மேலும் இது குறித்து அவன் ஒரு நாள்கூட கவலைப்பட்டதே இல்லை.

தன் தந்தையிடம் செலவுக்குக் காசு வாங்கிக் கொள்வான். அவர், எழிலன் ஒரே மகன் என்பதாலும் படிக்கும் மாணவர்கள் ஏதாவது வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்றும் எண்ணி அவன் கேட்கும் பொழுதெல்லாம் பணம் கொடுத்து வந்தார்.

எழிலன், தன் தந்தையார் கொடுத்த பணத்தை வாங்கிச் சாப்பிடாமல், தீய நண்பர்களுடன் சேர்ந்து சூதாட்டம் ஆடினான். மற்றவர்கள் அவன் கெட்டவன் என வெறுத்து ஒதுக்கும்படி அவனுடைய செயல்கள் இருந்தன.



அவனுடைய வகுப்பாசிரியர், அவனுடைய நடவடிக்கைகள் சரியில்லை என்று கண்டித்தார். பிறகு, அவனுடைய அப்பாவிடம் அவனைக் கண்டித்து வளர்க்குமாறும் சொன்னார். ஆனால், இவற்றால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. எழிலனின் தந்தையார் அவனுடைய செயல்களால் பெரிதும் மனம் வருந்தினார்.

ஒருநாள் காவல் துறையினர் 10 பேரை சாலையில் அடித்து உதைத்தபடி, இழுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

இதை பார்த்த எழிலன் கூடியிருந்தவர்களிடம், 'அவர்களை ஏன் காவல் துறையினர் அடிக்கிறார்கள்?' என்று கேட்டான்.

'அவர்கள் சூதாட்டம் ஆடிக் கொண்டிருந்தவர்கள்,' என்று கூறினர்.

பலநாள்கள் அவர்கள் அகப்படவில்லையென்றும், இன்று வகையாக அகப்பட்டுக் கொண்டார்கள் என்றும் அவர்கள் அவனிடம் மேலும் கூறினர்.

அதைக் கேட்டதும் எழிலனுக்கு உதறல் எடுத்தது. "மற்றவர்கள் வெறுக் கும்படி நடந்தால் இப்படித்தான் உதைபட வேண்டும். போலிருக்கிறது," என்று எண்ணி அன்றிலிருந்து திருந்தி விட்டான்.

அன்றிலிருந்து தீய நண்பர்களுடன் சேராமல், தந்தையிடம் பணம் வாங்காமல் பள்ளிக்கு ஒழுங்காக சென்று பாடங்களை நன்றாக படித்து வந்தான. தன் மகன் எழிலன் திருந்தியதைக் கண்ட அவன் தந்தையார் மகிழ்ந்தார்.

01.2016
29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1595 - ஷேக்ஸ்பியரின் ரோமியோவும் ஜூலியட்டும் நாடகம் முதன் முதலாக அரங்கேறியது.
- 1676 - மூன்றாம் பியோதர் ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1814 - நெப்போலியன் பொனபார்ட்டின் பிரெஞ்சு இராணுவம் பிரியென் நகரில் இடம்பெற்ற சமரில் ரஷ்யாவை வெற்றி பெற்றது.
- 1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராபில்ஸ் சிங்கப்பூரில் தரையிறங்கினார்.
- 1861 - கான்சஸ் ஐக்கிய அமெரிக்காவின் 34வது மாநிலமாக இணைந்தது.
- 1863 - ஐக்கிய அமெரிக்காவின் இடாகோ மாநிலத்தில் பெயார் ஆற்றருகில் இராணுவத்தினருக்கும் ஷோஷோன் பழங்குடிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமரில் பல நூற்றுக்கணக்கான பழங்குடிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1886 - ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் பெட்ரோலினால் இயங்கும் முதலாவது தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1916 - முதலாம் உலகப் போர்: பாரிஸ் ஜேர்மனியரின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது.
- 1929 - சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேற்றப்பட்ட லியோன் ட்ரொட்ஸ்கி துருக்கியை அடைந்தார்.
- 1940 - ஜப்பான், ஒசாக்காவில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற தொடருந்து ஒன்று வெடித்ததில் 181 பேர் கொல்லப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கொனியூச்சி என்ற இடத்தில் சோவியத் துணை இராணுவத்தினரினால் பெண்கள், குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 38 பேர் கொல்லப்பட்டனர்.
- 1946 - ஐக்கிய அமெரிக்காவில் ஊஐபு எனப்படும் மத்திய உளவுத்துறை குரூப் (Central Intelligence Group) அமைக்கப்பட்டது.
- 1996 - இத்தாலியில் வெனிஸ் நகரில் உள்ள ஓப்பரா மாளிகையான லா ஃபெனீஸ் தீயினால் அழிந்தது.
- 2005 - சீனாவின் பெருநிலப்பரப்பில் இருந்து 1949ம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக வர்த்தக விமானம் ஒன்று தாய்வானுக்கு வந்து சேர்ந்தது.

### பிறப்புகள்

- 1860 - ஆன்டன் சேகொவ், ரசிய எழுத்தாளர் (இ. 1904)
- 1866 - ரொமெயின் ரோலண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1944)
- 1926 - அப்துஸ் சலாம், நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானிய இயற்பியலாளர் (இ. 1996)
- 1970 - ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், இந்திய ஒலிம்பிக் வீரர்

### இறப்புகள்

- 1934 - பிரிட்ஸ் ஹேபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய வேதியியலாளர் (பி. 1868)
- 1963 - றொபேட் புறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (பி. 1874)
- 1981 - பாலகிருஷ்ணன், நாதஸ்வரக் கலைஞர் (பி. 1945)
- **1998 - பி. எஸ். பி. பொன்னுசாமி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1908)**



### பி.எஸ்.பி.பொன்னுச்சாமி

பி.எஸ்.பி.பொன்னுச்சாமி மதுரை மாவட்டம் பேரையூரில் பி. எஸ். பொன்னாயிரம் பிள்ளை - முத்தம்மாள் தம்பதியின் மகனாக 1908 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் திகதி பிறந்தார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தின் பொழுது அண்ணல் காந்தியடிகளின் சீரிய தலைமையை ஏற்று, பல்வேறு இன்னல்களை அனுபவித்து, பல பங்களிப்புகள் தந்த விடுதலைப் போராட்டத் தியாகிகளில் ஒருவர். இளம் வயதில் அண்ணல் காந்தியடிகளை மதுரையில் சந்தித்ததன் விளைவாக விடுதலைப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டார். 'சட்ட மறுப்பு இயக்கம்', 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' ஆகியவற்றில் பங்கேற்று இருமுறை மதுரை சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் வ.உ.சி.யைப் போல இவரும் செக்கு இழுத்திருக்கிறார். ஒருநாள சிறைக் கஞ்சியில் புழு இருந்ததைப் பார்த்து சக கைதிகளைத் திரட்டி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். மாவட்ட ஆட்சியரும், நீதிபதியும் நேரில் வந்து விசாரித்து இவரது கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஏற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். ஆனால் சிறை அதிகாரிகள் இவர் மீது பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சிறையில் இவருடன் இருந்தவர்களில் "தினமணி" முன்னாள் ஆசிரியர் ஏ.என்.சிவராமனும் ஒருவர். முதல்வர்கள் காமராஜர், பி.எஸ். குமாரசாமிராஜா ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் பொன்னுசாமி பிள்ளை விளங்கினார். இவரது தியாகத்தைப் பாராட்டி சுதந்திரதின வெள்ளிவிழாவின்போது அன்றைய பிரதமர் இந்திராகாந்தி தாமிரப்பட்டயம் வழங்கி கௌரவித்தார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழாவில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா சால்வை அணிவித்து கேடயம் வழங்கினார். தியாகிகளுக்கான மத்திய, மாநில அரசு ஓய்வூதியம் இவருக்குக் கிடைத்து வந்தது. சுதந்திரம் பெற்றபின் வத்திராயிருப்பு பகுதியில் அரசியல் பணியுடன் ஹரிஜன சேவை, கதர் மற்றும் கூட்டுறவு இயக்கத்தில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். பிளவுபடாத ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் செயலராகவும் இருந்துள்ளார். தமது 90 ஆவது வயதில் 1998 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி வத்திராயிருப்பில் அவரது இல்லத்தில் காலமானார். காந்தியவாதியான இவரது உடல் தகனம், காந்தி நினைவு நாளான ஜனவரி 30 ஆம் திகதி நடந்தது. இவரது தியாகம், எளிமை, நேர்மை, நகைச்சுவை உணர்வு ஆகியவற்றை இப்பகுதி மக்கள் இன்றும் நினைவு கூர்கின்றனர். இவரது மகன் பொன்.ஞானசேகரன், தினமணி செய்தி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். மற்றொரு மகன் பொன்.தனசேகரன் தினமணி, ஆனந்த விகடன் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் செய்தியாளராக பணியாற்றியவர். தினமலர் இதழில் வெளியான இவரது கட்டுரைக்கு 2008 ஆம் ஆண்டிற்கான சரோஜினி நாயுடு தேசிய விருது கிடைத்தது.

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு- உதரான்பதி அருள்மிகு சிந்தாமணிப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

## பொதுச்சபைக் கூட்டம் நாளை

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டி சங்க ராஜமாவத்தையில் அமைந்துள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கண்டி கிளை அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள மலையக கலைச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 38 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-134)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் விளையாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

அதிபர் ஜி.விமலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப் பாளர் பி.ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கே.குலபாலசிங்கம், யாழ். மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி கே.விஜிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5)

● ● ● ● ● ● ● ● ●

தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாட சாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ப. சதானந்தராஜா தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தருமான பொ.சந்திரநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோ. குலபாலசிங்கம், பழைய மாணவன் கலாபூஷணம் மு.மாசிலாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## ஒன்றுகூடல் நாளை

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தின் வடமாகாண அமையத்தின் ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் முதியோர் பத்திரிகை 3 ஆவது வெளியீடும் ஆய்வுரையும் இடம்பெறும். அத்துடன் மருத்துவம், உடல்நலம், மனநலம், உளவியல், ஆன்மீகத் துறைகள் சார்ந்த நிபுணர்கள், வைத்தியர்கள் பங்களித்து முதியோர் சுகவாழ்வு முறைமைகள், வழிகாட்டல்கள் பற்றிய விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெறும். (இ-5)

## வார நாட்களில் பிரத்தியேக வகுப்பு நடத்துவது தடை செய்யப்படும்

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

வார நாட்களில் காலை 7.30 மணியிலிருந்து பி.ப 1.30 வரையான காலப்பகுதிக்குள் நடத்தப்படும் பிரத்தியேக வகுப்புகளை தடை செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் குறித்த நேரப்பகுதிக்குள் மேலதிக வகுப்புகளை தடை செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பது தொடர்பில் அதிபர்களை அறிவுறுத்தியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவினை 80 சதவீதமாக அதிகரிக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன்மூலம் மாணவர்களின் பாடசாலை வரவை அதிகம் எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ள கல்வி அமைச்சர், தன்னால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த செயற்றிட்டத்திற்கு சகல பாடசாலை அதிபர்களினதும் பூரண ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஆசிரிய ஆலோசகர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையினை நடைமுறைப்படுத்தும் வரை கடமைப்பட்டியலுக்கு உட்பட்ட வேலைகளை மாத்திரம் செய்வதென வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் நேற்று முன்தினம் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்திலேயே மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கத்தின் தீர்மானத்தின்படி வடமாகாண ஆசிரிய ஆலோசகர்கள் வலயமட்ட, கோட்டமட்ட குழு மேற்பார்வைக்கு செல்லாது, இணைபாட விதான செயற்பாடுகளை மேற்கொள்ளாது பாடசாலை தரிசிப்புக்களை மாத்திரம் மேற்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட வேண்டுமெனவும் கற்றல், கற்பித்தலுக்கு புறம்பான எந்தவித கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என தொழிற்சங்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஏனைய 8 மாகாணங்களிலும் நடைமுறையில் இருந்து வருவதாகவும் நேற்று முன்தினத்தில் இருந்து வட மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் இந்த நடவடிக்கையினை அமுல்படுத்தியுள்ளதாக வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-9)

## இளைஞனைத் தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

இளைஞர் ஒருவரை சரமாரியாகத் தாக்கிய மூவர் கொண்ட குழுவினரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கரணவாய் நொத்தாரிசு தோட்டத்தினைச் சேர்ந்த யுவதி ஒருவர் அண்மைக்காலமாக மேற்படி மூவர் கொண்ட குழுவின் பகிடி வதைக்குட்பட்டிருந்தார்.

இதனை அவ்யுவதியின் சகோதரன் தட்டிக்கேட்டபோது அம்மூவர் கொண்ட குழுவினரால் யுவதியின் சகோதரன் கடுமையான முறையில் தாக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை அம்மூவர் கொண்ட குழுவினர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் அன்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அம்மூவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-5-60)

## தாக்குதலில் சிக்கி 10 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவில் நடைபெற்ற 3 தற்கொலைப் படை தாக்குதல்களில் 10 பேர் கொல்லப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியா நகரத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள சிபோக் பகுதியில் இந்த தாக்குதல்கள் நடைபெற்றன.முதல் தாக்குதல் நகருக்குள் நுழையும் வாயிலில் உள்ள சோதனைச் சாவடியில் நடத்தப்பட்டுள்ளது. இரண்டாவது தாக்குதல் மக்கள் நடமாட்டம் உள்ள சந்தை பகுதியிலும் மூன்றாவது தாக்குதல் சந்தைப் பகுதிக்கு அருகிலும் நிகழ்த்தப்பட்டன. இந்த தாக்குதலில் இதுவரை குறைந்தபட்சமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர். 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. இதனால் சிபோக் பகுதியில் பதற்றமும் குழப்பமும் நிறைந்து காணப்படுகிறது.

இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் இந்த தாக்குதல் போகோஹறாம் தீவிரவாதிகளால் நடத்தப்படிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நைஜீரியாவில் கடந்த ஒரு மாதத்தில் 3 தாக்குதல்கள் போகோஹறாம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டுள்ளது. இதில் கடந்த திங்கட்கிழமை போடோ கிராமத்தில் உள்ள சந்தை ஒன்றில் நடத்தப்பட்ட 3 தற்கொலைப்படை தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டனர்.

போகோஹறாம் தீவிரவாதிகள் 200 பாடசாலை மாணவிகளை கடத்தி வைத்திருந்த பகுதி அது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யோகா பயிற்சியும் ஆரோக்கிய உணவுக் கண்காட்சியும்

"விளையாட்டின் மூலம் தேக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் தேசிய ஒற்றுமையையும் அபிவிருத்தியையும் கட்டி எழுப்புவோம்"எனும் தொனிப் பொருளில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் யோகா பயிற்சியும் ஆரோக்கிய உணவுக் கண்காட்சியும் நேற்று வவுனியா, புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இதன்போது உடல் ஆரோக்கியத்திற்கான உடற்பயிற்சிகள், யோகாசன பயிற்சிகள், ஆரோக்கியமான உணவுக் கண்காட்சி அதனை சமைக்கும் முறை தொடர்பான விளக்கமளித்தலும் இடம்பெற்றது.

இதில் வவுனியா பிரதேச செயலாளர் க. பரந்தாமன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (2-250)



## ஏழு வருடங்களுக்கு மேல் பணியாற்றும் நகரப்புற ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

### வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

ஒரே இடத்தில் ஏழு வருடங்களுக்கு மேல் பணியாற்றும் நகர்ப்புற ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த25ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தில் பின்தங்கிய பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்தபோது அதற்கு பதில் அளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் ஆசிரியர்கள் ஒரே இடத்தில் நீண்டகாலமாக பணியாற்றுகிறார்கள். அவர்கள் 20,30 வருடங்கள் என நகர்ப்பகுதியில் இருக்க விரும்புகிறார்கள். ஆனால் ஏழு வருடத்திற்கு மேல் நகர் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஏனைய பகுதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கும் போது மக்கள் பிரதிநிதிகள் அவர்களுக்கு தூர இடம் வழங்க வேண்டாம் எனக் கூறவேண்டாம்.

ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (2-250)

# பொருளாதார வீழ்ச்சியுடன் ஆரம்பமாகும் ஒரு அரசியலமைப்பின் உருவாக்கம்?

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் "பொருளாதார வீழ்ச்சியுடன் ஆரம்பமாகும் ஓர் அரசியலமைப்பின் உருவாக்கம்" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம்...**

...அரசியல் அமைப்பின் இறைமைப் பெறுமதியை தீர்மானிப்பதற்கு அதன் இறுதி வரைபு உச்சநீதிமன்றத்தின் பரிசீலிப்பிற்கு விடப்பட வேண்டும் என்ற எதிர்க் கட்சியின் (அல்லது அதன் பிரிவுகள் சிலவற்றின்) கருத்து மிகமிகச் சரியானதே. இந்த அணுகு முறையை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது. 'ஆம்' அல்லது 'இல்லை' என வரையறுக்கப்பட்ட எளிதான பதிலைப் பெறும் பொருட்டு விரிவான பிரச்சினையை முன்வைத்தலாகாது என்பது போன்ற விவாதங்களும் முன்வைக்கப்பட்டுள்ளது. 1978 இன் அரசியலமைப்பிற்குப் பிற்பாடு 1982 இல் இடம்பெற்ற ஒரேயொரு மக்கள் கருத்துக்கணிப்பில் ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் பாராளுமன்றத்தின் ஆயுள் நீடிக்கப்பட்டமை எவ்வளவோ வாதப்பிரதிவாதங்களை கிளப்பியிருந்தது!

அரசியல் அமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப் பட்டிருக்கும் விசேட பாதுகாப்புடன் கூடிய ஏற்பாடுகளில் மாற்றம் கொண்டு வருவதானால் அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆராயப் பட்டே பதில் காணப்பட வேண்டும். ஆலோசனை பெற வேண்டிய கட்டங்களை அடைவதற்கு இன்னும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டும். இவை மட்டிலான விட்டுக்கொடுப்புகள் கருத்திணக்கப்பாடுகள் போன்றவற்றுக்கான தருணம் இப்போதுதான் உருவாகியுள்ளது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் குறைபாடுகளுக்குமான சர்வரோக நிவாரணியாக புதிய அரசியலமைப்போ அல்லது கிட்டத்தட்ட அதுபோன்ற ஒன்றுக்கான நகர்வோதான் இப்போது மேற்கொள்ளப்படுகிறது. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பே நாட்டின் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் என்ற விதமான தவறான எண்ணமே இந்தவித நகர்வுக்கான ஒரு பகுதிக்காரணமாக இருக்கிறது. இது எவ்வளவோ தூரம் உண்மைக்குப் புறம்பானதாக உள்ளது. இதேநேரம், அரசியலில் பல்வேறு சித்து விளையாட்டுக்களும் அதிகாரப் போட்டிகளுங் கூட அதனதன் போக்கில் இடம்பெற்றுக் கொண்டு தானுள்ளன. இவ்விதமாக எமது அரசியல் நீரோட்டத்தில் குழப்பகரமான தளம்பல் நிலைமைகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டேயிருப்பதால் விடயங்களை தெளிவாக பார்க்க முடியாத நிலையே தொடர்கிறது. போர்க்குற்றங்கள் என்ற வகையில் குற்ற விசாரணை அமர்வுகளில் வெளிநாட்டு நீதிபதிகள் கலந்துகொள்வது, அதிகாரப் பரவலாக்கல் விடயங்கள் போன்றவற்றுடன் ஜனாதிபதி பதவி, பாராளுமன்றம் மற்றும் பிரதமர் பதவிகளுக்கும் அமைச்சரவைக்குமான அதிகாரங்கள் - பங்கீடு போன்ற மேலும் பல முக்கியமான பெரிய பிரச்சினைகளுங் கூட கிளம்பவிருக்கின்றன.

எப்படியும் அனைத்திலும் பார்க்க கூடுதல் அவசரமான ஒன்றாக நாடு முகங்கொடுக்கும் கவனிப்பிற்குரிய உடனடிப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையேயாகும். அதாவது, உலக நாடுகளிலெல்லாம் நாம் பெற்றிருக்கும் அனைத்துக் கடன்கள் மீதான மீளளிப்புத் தொகையின் ஒட்டுமொத்த சுமையையும் சமநிலைப் படுத்துவதற்காக, மலையின் சாய்தளம் வழியாக மலையுச்சியின் சமதளம் நோக்கி உலக பொருளாதாரத்தை நகர்த்தும் பாரிய உலக முயற்சிக்கு கைகொடுக்கும் எமது பங்கிற்கான ஒரு நிலையேதான் எமது தற்போதைய முயற்சியும் என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். எமது சிறிய ஒத்துழைப்பிலும் சரிவு ஏற்படுமானால் பொருளாதாரம் எம்மையும் மீறி பின்நோக்கி அடிவாரம் வரை பாய்ந்து சென்று படு வீழ்ச்சியையே நாம் காண்பதுடன் அது முறையே உலகப் பொருளாதார • வீழ்ச்சிக்கும் காலாகிவிடும்! உலகப் பொருளாதாரத்தில் உலக நாடுகளின் பங்கும் இதுவேதான்!

இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே எமது பிரதமரும் சுவிஸர்லாந்தின் டாவோஸ் நகருக்குச் செல்கிறார். உலக அரசியல் மற்றும் வர்த்தக உயர்தர வர்க்க பெருமக்கள் போன்றோர் உலகப்பொருளாதார கலந்துரையாடல்களுக்கென அழைப்பின் பேரில் மட்டும் பங்குபற்றுவதற்குச் செல்லும் 'செல்வந்தர்களுக்கான கழகம்' என அழைக்கப்படும் பிரத்தியேகமான ஓர் இடமே இதுவாகும். இதில் கலந்துகொள்வதற்கு நேர்த்தியான உடையில் செல்லும் எமது பிரதமரே 'இலங்கையின் காலியான கஜானாக்களின் சொந்தக்காரராக' இருக்கவும் கூடும். தற்போதைய படுமோசமான குழப்பகர பூகோள-அரசியல் சூழ்நிலைக்குள் உலகமே கண்மூடித்தனமாக சென்றுகொண்டிருக்கிறதா? என்ற இன்றைய உலக நிலவரம் பற்றியே இங்கு கலந்துரையாடப்படவிருக்கிறது.

நிதியமைச்சினால் இந்தவாரம் கொழும்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையொன்றின்படி 2016 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின் அரசு வருமானம் சம்பந்தமான உத்தேச திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதை தாமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. இவற்றில் ஒன்றான 'VAT'- (Value Added Tax) வரிமுறைக்கான திருத்தங்கள் எல்லோர் மீதும் தாக்கம் செலுத்தும் மறைமுக வரிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதுடன் 'NBT' (Nation Building Tax) வரிமுறையானது பாரிய வர்த்தக மற்றும் தொழில் நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்துவதுடன் எப்படியும் நாட்டிலிருக்கும் ஒவ்வொருவர் மீதும் அதனது சுமையும் பகிரப்படுவதாகவேயிருக்கும்.

வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்சினையை தளர்த்துவதற்காக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக வியாபாரங்களுக்கான சுதந்திர விநியோக செயற்பாடுகள் மட்டிலான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதுடன் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே தமது கடன் விண்ணப்பங்களை பூர்த்தியாக்கியிருந்த கார் இறக்குமதியாளர்களுக்கு பழைய வரிவிகிதப் படியே இறக்குமதிக்கான பலனை அவர்கள் பெறுவதற்கும் ஏற்பாடாகிற்று. உள்ளூர் பொருளாதார நிலைமைகளில் உருவாகியிருக்கும் குழப்பகரமான நிலைமைக்கு திறமையற்ற வரவு செலவுத் திட்ட உருவாக்கமே காரணமென்ற கருத்தொன்று முன்வைக்கப்பட்டிருந்தாலுங்கூட மக்களது உணர்வுபூர்வ பிரச்சினையாகிய வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை விடயமாக அது ஏற்படுத்தியிருந்த சுமுகமான தாக்கம் அரசுக்கு சாதகமாகவேயிருக்கிறது.

எப்படியும் அரசின் வருமானத்திற்கென முன் வைக்கப்பட்ட உத்தேச திட்டங்களில் தடைப்பட்டிருக்கும் அல்லது ஏற்கனவே தாமதிக்க வைக்கப் பட்டிருக்கும் வரிப்பணத்தின் இடத்திற்கு அரசாங்கம் எங்கிருந்து பணத்தைப் பெறப்போகிறது என்ற மேலும் முக்கியமான கேள்வியொன்று தொடர்கிறது. 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் விடுபட்டிருக்கும் இப்பணத் தேவையை அரசு எவ்விதம் ஈடுசெய்யப் போகிறது?

தற்போது அரசாங்கம் இறங்கியிருக்கும் 'ஏறக்குறைய புதிதான அரசியலமைப்பு உருவாக்க நடவடிக்கைகளில்' நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை பற்றிய மக்களின் மனப்போக்கின் தாக்கம் எதிர் வரும் நாட்களில் அவ்விடயம் மக்களின் கருத்துக் கணிப்பிற்கு விடப்படும் போது நிச்சயம் எதிரொலிக்கும் என நம்பலாம். மனித உரிமைகள் சபைத் தீர்மானம் மற்றும் போர்க் குற்றங்கள் மீதான விசாரணைகள் பற்றிய தெளிவற்ற தன்மைகளே எல்லோரது மனங்களிலும் நிழலாடிக் கொண்டிருக்கும் இந்த நேரம் உண்மையில் புதிய அரசாங்கத்திற்கான சோதனைக்காலமொன்றே கூற வேண்டும்!

வீட்டில் தேன்நிலவு முடிவடைந்துவிட்டது. புதிய வீட்டினை ஒழுங்குபடுத்திக்கொண்டு குடும்ப விவகாரங்களில் சுறுசுறுப்பைக் காட்டுவதே எஞ்சியுள்ள விவகாரமாயுள்ளது?


(முற்றும்)



**தமிழில் யோகர்**

# மகிந்த அரசாங்கம் சீனாவிடம் கடன் பெற்றது தவறில்லையாம்

## சரத் அமுனுகம தெரிவிப்பு



கடந்த அரசாங்கம் சீனாவிடமிருந்து கடன் பெற்றமை சரியான விடயம் என அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்காக கடந்த அரசாங்கம் கடனை பெற்றுக் கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தை அடைந்துவரும் நாடுகள் தமது அரசாங்கத்திற்கு கடனை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.


எனினும், தற்போது கடனை பெற்று முன்னோக்கி செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதனால் நாட்டில் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இந்த எல்லையை விட்டு வெளியில் செல்ல முடியாது என அமைச்சர் தெரிவித்தார். (இ)

# ஞானசார தேரர் திட்டமிட்டு சிறைச்சாலைக்கு சென்றார்

## மேஜர் அஜித் பிரசன்ன குற்றச்சாட்டு



பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திட்டமிட்டு வேண்டுமென்றே சிறைக்குச் சென்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் தென் மாகாணசபை உறுப்பினரும், தாய் நாட்டுக்கான படைவீரர்கள் அமைப்பின் அழைப்பாளருமான மேஜர் அஜித் பிரசன்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேஜர் அஜித் பிரசன்ன மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றில் தவறுதலாக தொலைபேசி ஒலித்த போது ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரை கைது செய்தால், பௌத்த பிக்குகளுக்கும் சட்டம் ஒரேவிதமாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

புத்தளம் நீதிமன்றம் மீது கல் வீசிய றிசாத் பதியுதீனை கைது செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான் ரங்க திஸாநாயக்கவே, ஞானசார தேரரை கைது செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள படைவீரர்களுக்கு பிணை வழங்கப்பட வேண்டுமென போராடி வருகின்றேன்.

எனினும் இந்தப் போராட்டங்களில் ஒரு நாளேனும் ஞானசார தேரர் பங்கேற்கவில்லை. இது தொடர்பில் ஒரு நாளும் அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. இந்த நாட்களில் சிறைக்குச் செல்ல வேணடிய மிகுந்த அவசியமொன்று ஞானசார தேரருக்கு காணப்பட்டது.

ஞானசார தேரர் திடீர் ஹீரோவாக மாறவே விரும்புகின்றார்.

உணர்வுகளுக்கு அடிமையாகிய சில சிங்கள பௌத்தர்களை ஆத்திரமூட்டி முஸ்லிம் கடைகளை எரித்து. சிலரைத் தாக்கி பிரச்சினை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்.

இதன் மூலம் சிங்கள, முஸ்லிம் கலவரத்தை உருவாக்கி, மக்கள் அதன் பின்னர் ஓடும் போது நாட்டை பிளவடையச் செய்யும் அரசியல் சாசனமொன்றை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கக் கூடிய பின்னணியை உருவாக்கிக் கொள்ள முடியும்

இது முழுக்க முழுக்க ஓர் சூழ்ச்சித் திட்டமாகும். இவர்கள் மகிந்தவிற்கும் இதனையே செய்தார்கள். தற்போது சிங்க லே என்ற அமைப்பின் ஊடாக குழப்பம் விளைவிக்க முயற்சிக்கின்றார்கள். அரச சார்பற்ற நிறுவனங்களின் பணத்தைக் கொண்டே இவ்வாறான போராட்டங்கள் நடத்தப்படுகினறன.

இந்த சூழ்ச்சி திட்டங்களில் சிங்கள, பௌத்தர்கள் சிக்கிக் கொள்ளக் கூடாது. உணர்வுகளுக்கு அடிமையாகாது மேலும் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணமிது என மேஜர் அஜித் பிரசன்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அதிவேக வீதியில் வாகனங்கள் மீது கல்வீச்சு சம்பவங்கள் அதிகரிப்பு

தெற்கு அதிவேக வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மீது கல் வீச்சு மேற்கொள்ளப்படுவதால் வீதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அவசர பொலிஸ் சேவை மற்றும் மோட்டார் சைக்கிள் பொலிஸாரின் எண்ணிக்கை குறித்த வீதியில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகனம் தொடர்பான பதில் பொலிஸ்மா அதிபர் அமரசிறி தெரிவித்துள்ளார்.


மேலதிகமாக தெற்கு அதிவேக வீதிக்கு அண்மித்த பிரதேசங்களிலும் பொலிஸ் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அதிவேக வீதியின் 21ஆவது மைல் கல்லுக்கு அண்மையில் இருவர் வீதியில் பயணித்த வாகனங்கள் மீது கற்களை வீசியதாக முறைப்பாடு கிடைத்துள்ளதுடன் 6 வாகனங்கள் இதன் காரணமாக சேதமுற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 617

**கண்ணதாசன்**




**ஜெகானந்தன்**




**பாலா சர்மா**




**தர்மேந்திரா**




**கலாமணியம்**

உன் நண்பன் வெற்றி பெறும்போது
"அவன் என் நண்பன்" என்று கூறி
பெருமை கொள்!
உன் நண்பன் தோல்வி அடையும்போது
"நான் உன் நண்பன்" என்று கூறி
அருகில் நில்!

**அனுசியா**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்தியா - அவுஸ்திரேலியா
# 2-வது இருபது-20 போட்டி இன்று

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 2 ஆவது 20 ஓவர் போட்டி மெல்பேர்ன் நகரில் இன்று நடைபெறவுள்ளது

3 போட்டி கொண்ட இருபது-20 தொடரில் அடிலெய்டுவில் நடந்த முதல் 20 ஓவர் ஆட்டத்தில் இந்தியா 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் இன்றைய போட்டியிலும் வென்று இந்திய அணி தொடரை வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருநாள் தொடரை இழந்த இந்தியாவுக்கு 20 ஓவர் தொடரை கைப்பற்ற நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை வீரர்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் தோற்றால் கடைசி ஆட்டத்தில் நெருக்கடி ஏற்படும்.

துடும்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சமபலத்துடன் இருக்கும் இந்தியஅணிமுழுதிறமையுடன்விளையாடினால் தொடரை வெல்லலாம்.




வீராட்கோலி, ரோகித் சர்மா, தவான், ரெய்னா ஆகியோர் துடுப்பாட்டத்திலும், பம்ரா,அஸ்வின், ஜடேஜா ஆகியோர் பந்து வீச்சிலும் நல்ல நிலையில் உள்ளனர்.

யுவராஜ்சிங் மீதான எதிர்பார்ப்பு இன்னும் இருக்கிறது. துடுப்பாட்டத்தில் வாய்ப்பு இருந்தால் அவர் தனது திறமையை வெளிப்படுத்துவார். இன்றைய போட்டிக்கான அணியில் மாற்றம் இருக்காது என்று தெரிகிறது.


அவுஸ்திரேலிய அணி முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்கும் ஆர்வத்துடன் இருக்கிறது. தொடரை இழக்காமல் சமன் செய்யும் வகையில் அந்த அணி கடுமையாக போராடும். சொந்த மண்ணில் விளையாடுவதால் அந்த அணி நம்பிக்கையுடன் இருக்கிறது.

அந்த அணியின் களத்தடுப்பு கடந்த ஆட்டத்தில் மோசமாக இருந்தது. இதை சரி செய்யும் வகையில் இன்றைய ஆட்டம் அமையும். கடந்த போட்டியில் கழற்றிவிடப்பட்ட மார்ஷ் சகோதரர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் இதுவரை மோதிய ஆட்டத்தில் இந்தியா 6இல் அவுஸ்திரேலியா, 4இல் போட்டியில் வெற்றி பெற்றன. இன்றைய ஆட்டம் இந்திய நேரப்படி பிற்பகல் 2.08 மணிக்கு தொடங்குகிறது. ஸ்டார் ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் இந்தப்போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

## இன்றைய போட்டி

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தி வரும் “வடக்கின் சமர்” உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை (29.01.2016) இரவு 8.30 மணியளவில் மின்னொளியில் தொடங்கும் சுப்பர்-8 ஆட்டங்களின் முதலாவது போட்டியில் ஞானமுருகன் அணி மன்னார் மாவட்ட பலமான அணிகளில் ஒன்றான கில்லறி அணி பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (க)



## அவுஸ்திரேலியாவின் சிறந்த டெஸ்ட் வீரருக்கான ஆலன் பார்டர் விருதை தட்டிச் சென்ற வோனர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கான, ஆண்டின் சிறந்த வீரருக்கான அலன் போடர் பதக்கத்தை, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோனர் வென்றார். தலைவரான ஸ்டீவன் சுமித்தை முந்தியே, இக்கௌரவத்தை அவர் பெற்றுக் கொண்டார். ஆண்டின் டெஸ்ட் வீரருக்கான விருதையும்,டேவிட் வோனரே வெற்றி கொண்டார். சிறந்த வீராங்கனைக்கான மெலின்டா கிளார்க் விருதை, எலைஸ் பெரி வெற்றிகொண்டார். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சிறந்த வீரர் விருதை, கிளென் மக்ஸ்வெல், சிறந்த உள்ளூர் பெறுபேறுகளுக்கான விருதை அடம் வோஜஸ், சிறந்த வளர்ந்து



வரும் வீரருக்கான விருதை, அலெக்ஸ் றொஸ்-உம் வென்றனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வோனர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், ‘முதலாவது 20 ஓவர் போட்டியில் நாங்கள் இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் வீசிய 8 ஓவர்களில் 50 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்துள்ளோம். இந்த பகுதியில் நாங்கள் முன்னேற்றம் காண வேண்டும்.

மிடில் ஓவர்களில் சுழற்பந்து வீச்சை திறம்பட சமாளித்து, பெரிய ஷாட்டுகள் அடித்து விளையாட வேண்டும். இங்குள்ள மிகப்பெரிய மைதானங்களை எங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்’என்றார். (க)

## இந்திய இர்பான் பதானுக்கு பெப்ரவரியில் டும் டும் டும்

இந்திய கிரிக்கெட்டின் ஓல்ரவுண்டர் இர்பான் பதான் இந்திய அணியில் இருந்து கழற்றி விடப்பட்டு 4 ஆண்டுகள் ஆகிறது. இந்த நிலையில் இர்பான் பதான் திருமண விடயம் பற்றிய தகவல் வெளியாகி உள்ளது. பெப்ரவரி முதல் வாரம் அல்லது 2-வது வாரத்தில் அவரது திருமணம் நடக்கிறது. மணமகள் பெயர் ஷபா என்று தெரியவந்துள்ளது.



இதுகுறித்து இர்பானிடம் கேட்ட போது பெப்ரவரியில் எனது திருமணம் நடைபெறப்போவதாக வந்த செய்தி உண்மை தான். இது குறித்து நான் மேலும் எதுவும் கூற விரும்பவில்லை. விரைவில் எனது அறிக்கை வெளியிடப்படும் என்றார். (க)

## வல்லை ஊக்குவிப்பு குழுவினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட தொடர்

### ரேவடி விளையாட்டுக் கழகம் சம்பியன்





வல்லை ஊக்குவிப்பு குழுவினால் நடத்தப்பட்ட7 நபர்கள் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் வல்லை ரேவடி விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆகியது. வல்லை ஊக்குவிப்பு குழுவினால் நடத்தப்பட்ட 7 நபர்கள் கொண்ட உதைபந்தாட்டதொடரில் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ரெயின்போ விளையாட்டுக்கழகம் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் வல்லை ரேவடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்லை இளம்கதிர் விளையாட்டுக்கழகம் மோதியது. இரு அணிகளும் 2 புள்ளி பெற்றதால் ஆட்டம் சமனிலையனாது. சமனிலை தவிர்ப்பு தண்ட உதையில் வல்லை ரேவடி விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆகியது. தொடரின் ஆட்டநாயகனாக ரேவடி விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த சஞ்சிக்கும் ஆட்டநாயகனாக இளம்கதிர் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த பிரசாந்தும் சிறந்த கோல்காப்பாளராக ரேவடி விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த பிரேம்ஜீயும் தெரிவானார். (க)

அக்கினிக்குஞ்சொன்று கண்டேன் ஆங்கொரு மரப்பொந்திட வைத்தேன் வெந்து தணிந்தது காடு. ~ பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழருக்குத் தமிழர் விரோதிகளாகிப் போனால்...

தமிழ் மக்கள் பாவம் என்று சொல்வதைத் தவிர இன்று வேறு எந்த வார்த்தையும் எவரிடமும் இல்லை. அந்தளவிற்கு ஈழத் தமிழினத்தின் நிலைமை உள்ளது.

ஒரு காலத்தில் சிங்கள ஆட்சித் தலைமைகள் எங்களை ஏமாற்றினார்கள். தமிழ்த் தலைவர்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து இனத்துக்காகப் போராடினர். தமிழ்த் தலைவர்களுக்குப் பின்னால் தமிழ் மக்கள் அணி திரண்டு நின்றனர்.

ஆனால், இன்றைய நிலைமை அதுவல்ல. தமிழ்த் தலைவர்களில் யாரை நம்புவது என்பதாக நிலைமை உள்ளது. கட்சித் தொண்டர்கள் என்று எவரும் கிடையாது.

தேர்தலில் வெற்றி பெறுவதாக இருந்தால்; சாராயம், கொத்துரொட்டி, இலஞ்சம் என்பவற்றுக்காக பணத்தை தாராளமாக இறைக்க வேண்டும் என்பதே யதார்த்தம்.

கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு எம்.பி பதவியை பெறுவதென்பது தனி மனிதர்களால் சாத்தியமற்றது எனும்போது, ஆளுந்தரப்புடன் ஒப்பந்தம் செய்து, நீ காசை இறை; நான் உனக்காக தமிழ் இனத்தையே விற்று விடுவேன் என்று உறுதிமொழி வழங்கி பதவி பெறும் அளவிலேயே எங்கள் தமிழினத்தின் நிலைமையாயிற்று. இதனால்தான் தமிழினம் பாவம் என்று சொல்லவேண்டியுள்ளது.

இதற்கு அப்பால், ஒரு காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் சில சமயங்களில் சோர்வுற்றாலும் இளைஞர்கள் அவர்களுக்கு உற்சாகம் கொடுத்தனர்.

இளைஞர் படை இருக்கும் போது நீங்கள் எதற்குத் தயங்க வேண்டும் என்ற கேள்வி தமிழ்த் தலைவர்களை நிமிர வைத்தது.

கூடவே, தமிழ்ப் புத்திஜீவிகள் தமது அரசியல் தலைவர்களுக்கு நல்ல ஆலோசகர்களாக இருந்தனர். இதனால் அன்றைய தமிழ் தலைவர்கள் சோரம் போகாமல் தமது அரசியல் நடவடிக்கைகளை தமிழினத்துக்காக முன்னெடுத்தனர்.

ஆனால், இன்றைய நிலைமை மிகவும் வேதனைக்குரியது. ஒரு லப்டொப்புக்காக விலை போகின்ற ஒரு சில மாணவர்கள் இருக்கின்ற காலம்.

விடுதலைப்புலிகளுடன் கூடிக்குலவியிருந்த புத்திஜீவிகள் சிலர் தங்கள் சுயநலத்துக்காக இன்று ஆளுந்தரப்பு விசுவாசிகளாகி எல்லாவற்றையும் நாசமறுக்கத் தலைப்படும் கேவலம் நடக்கின்ற நேரமிது.

ஆகையால், தமிழினத்தின் எதிர்காலம் என்பது மிகவும் பயங்கரமானதாக – ஆபத்தானதாக இருக்கும் என்பதில் மாற்றமில்லை.

இவ்விடத்தில்தான் தமிழ்ப் புத்திஜீவிகள் உள்ளிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம், தமிழினத்தை ஒன்றுபடுத்தி; ஓரணியில் நிறுத்தி தமிழ் மக்களின் உரிமை ஒன்றே எங்களின் அசையாத இலக்கென ஒருமித்து குரல் கொடுக்கச் செய்தாக வேண்டும்.

இதுவே, அதற்கான சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் எங்கள் வாழ்வுக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த பிள்ளைகள் பாவங்கள்; அவர்களின் குடும்பங்கள் பாவங்கள்; போர் நடந்த போது எங்களுக்காக உயிர்விட்ட தமிழ் மக்கள் பாவங்கள் என்பதாக நிலைமை முடிந்து விடும்.

ஆகையால், தமிழருக்குத் தமிழர் விரோதிகள் என்ற சூழ்நிலைக்கு இம்மியும் இடங்கொடாமல் பார்த்துக் கொள்வது எங்கள் அனைவரதும் தார்மிகக் கடமை.

# போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கு விசேட புலனாய்வுப் பிரிவு

## ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

சட்டவிரோத போதைப்பொருள் சுற்றிவளைப்புகளுக்கான விசேட புலனாய்வு பிரிவினை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்புடைய துறைகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சட்டவிரோத போதைப்பொருட்கள் தொடர்பாக கடந்த வருடம் எவ்வளவு தான் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டபோதும் ஹெரோயின் போன்ற போதைப்பொருள் பாவனைகள் குறையவில்லை என புள்ளிவிபரங்களின் மூலம் சுட்டிக்காட்டப்படுவதுடன், அது பற்றி கணடறிந்து உடனடியாக தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கினார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2016ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ் அறிவுறுத்தல்களை வழங்கினார். போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான அனைத்து நிறுவனங்களதும் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் சுற்றி வளைப்புக்கள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகளில் தேவையான மாற்றங்களை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வட மாகாணத்தில் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு காணப்படுவதுடன் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ஏற்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார்.

அவ்வாறே மதுவரி கட்டளைச் சட்டத்திற்கு முரணாக நடத்திச் செல்லும் சட்டவிரோத மதுபானசாலைகள் தொடர்பாக இவ் ஆண்டு முதல் சட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு மதுவரி ஆணையாளருக்கு அறிவுரை வழங்கிய ஜனாதிபதி எதிர்வரும் ஆறுமாத காலத்திற்குள் சகல அரச நிறுவனங்களிலும் போதைப் பொருள் ஒழிப்பு தேசிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சுற்றறிக்கைகளை வெளியிடுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

பொதுமக்கள் தமது பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள 1919 தொலைபேசி இலக்கத்தினூடாக போதைப்பொருள் வியாபாரம் தொடர்பான தகவல்களை வழங்க முடியுமென இங்கு குறிப்பிடப்பட்டது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக அதனோடு தொடர்புடைய சகல நிறுவனங்களினாலும் 2015ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்பற்றி இங்கு ஜனாதிபதிக்கு அறிவூட்டப்பட்டதுடன், சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், பொலிஸ திணைக்களம் ஆகியன ஏற்புடைய சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கமளித்தன.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் மூலம் 2016ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக பாடசாலை மாணவர்களின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் விரிவானதொரு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றின் மூலம் மக்களை அறிவூட்டு வதற்காக நடைமுறைப்படுத்த முடியுமான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் நேரடியாக பங்களிப்புச் செய்யும் பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். (இ)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(புதுமுறிப்பு)

மு/அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் கீ.பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாள்ர் சி.ஜெயபாலன், சிறப்பு விருந்தினர்களாக மேற்படி வித்தியாலய ஆரம்பக் கல்வி ஆசிரியர் ப. தேவநேசன், முன்னாள் அதிபர் பூ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-307)

## மெய்வல்லுநர் போட்டி நாளை

கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவர்களான திரு. திருமதி ம.சிவலிங்கம் தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-254)

## ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசில் வழங்கலும்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை ஸ்தாபகர் நினைவு நாளும் பரிசில் நாளும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ம.உமாசங்கர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கௌரவ விருந்தினராக அருட்தந்தை தி.டிக்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## கலந்துரையாடல்

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் (JMF) ஏற்பாட்டில் புதிய யாப்பிற்கான பிரேரணை பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வளவாளராக முன்னாள் வடகிழக்கு மாகாண சபை முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார். இதில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# பொங்கல்- அறுவடை விழா

(கிளிநொச்சி)

Heyleys, Nestle, விவசாயபீடம் யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் ஹற்றன் நஷனல் வங்கியின் ஒழுங்குபடுத்தலில் ஹற்றன் நஷனல் வங்கி கிளிநொச்சி தெற்கு கிளையினால் பொங்கல்–அறுவடை விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

காலை 9.35 மணிக்கு கோமாதா பூஜை நடைபெற்று பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து அறுவடை நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வுகளாக அருவி வெட்டுப் பாடல், உழவர் நடனம், கும்மி நடனம் இடம் பெறும்.

அத்துடன் விவசாய காட்சிப்படுத்தல்களைப் பார்வையிட முடியும். Heyleys மற்றும் Nestle நிறுவனங்களின் புதிய தொழில்நுட்பங்கள், ஏற்றுமதி, விவசாயம் சார்ந்த காட்சிப்படுத்தல்கள், விவசாய இரசாயனம் சார்ந்த பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் செயற்பாட்டு விளக்கத்துடன் கூடிய ஆலோசனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைப்பார். (2)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### கேள்விகளும் ஆசைகளைச் சமாளிக்கும் வழிகளும்


ஒரு சிறுவன் கேள்வி ஒன்றைக் கேட்டான். ஸ்ரீஸ்ரீ அவர்கள் பதிலளிப்பத ற்கு முன்பாகவே மற்றொரு கேள்வியைக் கேட்கத் தயாரானான். இதற்குக் குருஜீ சொன்னார். “கேள்வியை நீ பற்றிக் கொண்டிருந்தால், விடையை எப்படி நீ பெற்றுக் கொள்வாய்?”கேள்வியை என்னிடம் கொடுத்துவிடு. அப் பொழுது நீ ஏற்கனவே விடையில் உள்ளதைக் காண்பாய். ஆசைகள் தானாகவே எழுகின்றன. இல்லையா? ஆசைகள் வருவதற்கு முன்பு உங்களைக் கேட்டுக் கொண்டு தான் வருகின்றனவா? அவைகள் வரும்போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களுக்கு எந்த ஆசையும் வேண்டாம் என்று சொன்னால், அதுவே இன்னொரு ஆசையாகிறது.

ஆசைகளைச் சமாளிக்க இதோ இன்னொரு வழி. நீங்கள விமானத்தில் ஏற நினைத்தாலோ, திரைப்படம் பார்க்க விரும்பினாலோ நீங்கள் ஒரு நுழைவுச்சீட்டை வாங்க வேண்டும். அந்த நுழைவுச்சீட்டு நுழைவாயிலில் கொடுக்கப்படவேண்டும். நுழைவுச்சீட்டை நீங்கள் பற்றிக் கொண்டே இருந்தால், நீங்கள் உள்ளே எப்படிச் செல்வீர்கள்?

ஒரு கல்லூரியில் நீங்கள் சேர வேண்டுமானால், விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து கல்லூரியில் கொடுக்க வேண்டும். அதனைக் கொடுக்காது பற்றிக் கொண்டிருக்க முடியாது. இதுபோல வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் உங்கள் ஆசைகளை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்காமல் விட்டுக் கொண்டே போக வேண்டும். அவ்வாறு செய்தீர்களேயானால் ஆசைகள் குறைவாகவே எழுகின்றன. ஆசைப்பட்டுக் கொண்டேயிருந்தாலும் அவ்வாசைகள் நிறைவேறாமல் இருப்பவர்கள் துரதிர்ஷ்டசாலிகள். ஆசைகள் எழுந்து நீண்டகாலம் ஆன பிறகு நிறைவேறப் பெறுபவர்கள் கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள். ஆசைகள் எழுந்த உடனேயே அவை நிறைவேறப் பெறுபவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். ஆசைகள் எழுவதற்கு முன்பே மனநிறைவு இருப்பதால் ஆசைகள் இல்லாதவர்கள் மாபெரும் அதிர்ஷ்டசாலிகள்.

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2016~12.02.2016



**பரிவர்த்தனை யோகத்தால் பண வரவு கூடும்! முயற்சியில் தளர்ச்சி இல்லாமல் முன்னேற்றத்தையே குறிக்கோளாக கொண்டு செயற்படும் துலாம் இராசி நேயர்களே!**

தைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தொடக்கத்திலேயே உங்கள் ராசிநாதன் சுக்ரன் பரிவர்த்தனை

எத்தனையோ முறை முயற்சி செய்தும் இந்த காரியம் நடைபெறவில்லையே என்று நினைத்தவர்களுக்கு முயற்சி செய்யாமலேயே இப்பொழுது காரியம் கைகூடப்போகிறது. குடும்ப முன்னேற்றம் கூடும்.

பெண்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மண், பூமி வாங்கக்கூடிய வாய்ப்புகள் கைகூடும். பொன், பொருள் சேர்க்கையும் ஏற்படும் நேரமிது. பழைய கட்டடங்களை பழுது பார்க்கும் சூழ்நிலை சிலருக்கு உருவாகும். பிறர் வியக்குமளவு வீடு கட்டி குடியேற வேண்டுமென்று நினைத்தவர்கள், இப்பொழுது ஏழரைச் சனியின் ஆதிக்க காலத்தில் கட்டத் தொடங்குவது நல்லது. குறிப்பாக குடும்பச்சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெற்றுகொண்டிருக்கிறது. எனவே, அடிப்படை வசதிகளை பெருக்கிக்கொள்ள ஆயத்தம் ஆகும் நேரமிது. எனவே தெய்வ வழிபாடுகளையும், சிறப்பு வழிபாடுகளையும் ழேற்கொண்டு யோகபலம் பெற்ற நாளில் கட்டடப் பணியை தொடங்குவது நல்லது.

வாரந்தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவதோடு அங்காரகனையும், சுக்ரனையும், செவ்வாய், வெள்ளி ஆகிய

அள்ளிக்கொடுப்பதில் வல்லமை பெற்ற சுக்ரன் சகாய ஸ்தானத்திற்கு ஜனவரி 20 ஆம் திகதிதி செல்கிறார். விரயாதிபதி புதனுடன் சகாய ஸ்தானத்தில் இணைந்து சஞ்சரிப்பதால் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு வரவு வந்துசேரும். பழைய சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்க முற்படுவீர்கள். மாமன, மைத்துனர்களின் குடும்ப விழாக்களுக்கு கொடுத்துதவும் சூழ்நிலையும், மங்கல நிகழ்ச்சி களை முன்னின்று நடத்தும் அமைப்பும் உருவாகும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 6 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மகர ராசிக்கு செல்ல இருக

ஆதரவோடு, அரசு வேலைகள் அனைத்தும் துரிதமாக முடியும். கூட்டாளிகள் மனமாற்றம் ஏற்பட்டு, விலகிச்சென்றவர்கள்கூட பகை மறந்து மீண்டும் வந்திணைவர்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 7 ஆம் திகதி குரு சிம்ம ராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கி




வகுத்துக் கொடுப்பார்.

பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகபபெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கொடிகட்டி பறந்த குடும்ப பிரச்சினைகள் அகலும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைப்பதோடு உங்கள் பெயரிலேயே புதிய தொழில் தொடங்க உறவினர்கள் கூட்டு சேர முன் வருவர்.

கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பெற்றோர்களின் மணி வழா, முத்து விழா போன்ற விழாக்களும், பெண் குழந்தைகளின் சுப சடங்குகளும் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ள பெண்கள் மேலதி காரிகளின் ஆதரவோடு நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

வெற்றிக்குரிய தகவல்கள் அதிகம் வரும் மாதமிது. சர்ப்ப சாந்தி பரிகாரம் செய்வதன் மூலம் தன விருத்தி அதிகரிக்கும்.

## பரிவர்த்தனை யோகத்தால் பணவரவு கூடும்!

யோகம் பெற்று சஞ்சரிக்கிறார். குறிப்பாக தனாதிபதியான செவ்வாய் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருப்பதால் மனக்கலக்கம் அகலும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷ தகவல் வந்து சேரும்.

நாட்களில் வழிபட்டு வந்தால் தங்கு தடைகளும் அகலும். தங்கம், வெள்ளியும் வந்துசேரும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதிலிருந்த தடைகளும் அகலும். நந்தி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

கிறார். அங்குள்ள லாபாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். 9இற்கு அதிபதியும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியும் சேரும் போது பொன் பொருட்கள் வந்து சேரும். புகழ் கூடும். புதிய திருப்பங்கள் உருவாகும். அன்பு நண்பர்களின

றார். அங்கு சுமார் 1 மாதங்கள் தான் வக்ர இயக்கத்தில் இருக்கப் போகிறார். இதன் விளைவாக சில நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரலாம். லாப ஸ்தானத்தில் இருக்கும் ராகுவோடு சேருவதால் பொருளாதார முன்னேற்றத்தில் ஏற்பட்ட சிக்கல்களை அகற்றுவார். வருமான பெருக்கத்திற்கும் வழி

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**அஷ்ட லட்சுமிகளும் இல்லம் வரும் நேரம்! தெய்வ நம்பிக்கை இருந்தால் சிறப்பான வாழ்க்கை அமையும் என்று தெரிவிக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

தைமாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது நெய் மணக்கும் பொங்கலும், நினைத

தனை யோகம், தொழில் ஸ்தானத்தில் பணம் தரும் பாம்புக்கிரகம், லாபாதிபதி புதன் தன ஸ்தானத்தில் என்று உலா வரும் போது எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். இதயம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பொன் ஆபரணங்கள் வாங்கும் முயற்சியிலும், புதிய வீடு கட்டும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

தொழில் ஸ்தானத்தில் ராகு பகுவான் நிற்க, தொழில் ஸ்தானாதிபதி சூரியன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இதுவரை சுமாராக நடைபெற்ற தொழிலில் இனி அதிக லாபம் கிடைக்கும். பணியாளர் தொல்லை அகலும்.

ஜென்மச்சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும், அவரோடு சுக்ரன் இணைந்திருப்பதால் நன்மைகளையே வழங்குவார். சனியோடு சுக்ரன் இணைவதால் இனிய காரியங்கள் ஏராளமாக செய்ய போகிறீர்கள். புனித பயணங்கள் அதிகரிக்கும். புகழ், கீர்த்தி மேலோங்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு

நீண்ட நாள் ஆசை நிறைவேறும். சனிக்கிழமை தோறும் ஆனை முகப்பெருமானையும், அனுமனையும் வழிபாடு செய்யுங்கள். செவ்வாய்க்கிழமை தோறும் முருகனை முன்னிலைப்படுத்தி காரியத்தை தொடங்குங்கள். பிரதோஷ நாளில் நந்தி தேவரை வழிபாடு செய்யுங்கள். நல்ல காரியங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி**

ஜனவரி 20ஆம் திகதி தனுசு ராசிக்கு சுக்ரன் பெயர்ச்சி ஆகிறார். 7, 12இற்கு அதிபதி 2 இல் சஞ்சரித்து லாபாதிபதியுடன் கூடும்பொழுது வாழக்கை துணை வழியே வரவு வந்து சேரும். வாழ்க்கை

வார். அவர் 10இறகு அதிபதி சூரியனோடு பிப்ரவரி 6 ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் சேருகிறார். எனவே, உடன்பிறப்புகளின் உதவிகள் கிடைக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வளர்ச்சிக்கு வித்திட மாற்று இனத்தவர்களும் முன்வருவர். குருவின் பரிபூரண பார்வை சகாய ஸ்தா




களின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். குல தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுவது நல்லது. பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். புதிய ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிட்டும். இம்மாதம் விநாயகப்பெருமான் வழிபாடு வெற்றிகளை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்தி தரும். குடும்பத்தில் உங்கள் குண மறிந்து நடந்துக் கொள்வர். தாய்வழி ஆதரவு கிடைக்கும். சகோதர குடும்ப விழாக்களில் கலந்துகொண்டு மகிழ்வீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது.

## அஷ்டலட்சுமிகளும் இல்லம் தேடி வரும் நேரம்!

தாலே இனிக்கும் கரும்பும், பங்குபெறும் இம்மாதம் வளர்ச்சி கூடுதலாக வரும் விதத்திலும், வருமானம் திருப்தி தரும் அமைப்போடும் கிரக நிலைகள் உலா வருகின்றன. உண்மையிலேயே, 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழி உங்களுக்கு ஏற்றதாக அமையப் போகிறது.

நான்கு கிரகங்கள் பரிவர்த்

செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும்.

ஞானகாரகன் கேது நாலில் இருப்பதால் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டுவது நல்லது. அலைச்சலை குறைத்துக்கொள்வதன் மூலமும், ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலமும், ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு

துணைக்கு உத்தியோகம் கிடைப்பது சம்பந்தமாக முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து அழைப்புகள் வந்து சேரும். புத சுக்ர யோகத்தின் விளைவாக புதிய நண்பர்களின் அறிமுகமும், பொருளாதார விருத்தியும் ஏற்படும்.

**மகர புதனின் சஞ்சாரம்!**

புதன் உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியா

னத்தில் பதிவதால் பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 7 ஆம் திகதி முதல் குரு சிம்ம ராசிக்கு வக்ர இயக்கத்தில் செல்கிறார். அங்கிருக்கும் ராகுவோடு இணைவதால் செயல் ஸ்தானம் பலமடைகிறது. எனவே, கொள்கை பிடிப்போடு செயறபட இயலும். குடும்பத்தில் உள்ளவர்

மகர புதனின் சஞ்சாரத்திற்கு பிறகு அதாவது பிப்ரவரி 6 ஆம் தகதிக்கு மேல் சிகரத்தை தொடும் அளவிற்கு உங்கள் முன்னேற்றம் இருக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்குவது பற்றி குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுப்பர். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

# வீதி விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

தேநீர் குடிப்பதற்கென பஸ்ஸிலிருந்து இறங்கி பாதையைக் கடக்க முற்பட்டவரை எதிர்த் திசையில் வந்த தனியார் பஸ்ஸொன்று மோதியதில், குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

பிசோகொட்டுவ, தியசேன்புர பகுதியைச் சேர்ந்த 48 வயதானவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹபரணை - பொலன்னறுவை பிரதான வீதியின் மொரகஸ்வெவ பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர், கொழும்பிலிருந்து மெதிரிகிரிய நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் பயணித்துள்ளார்.

பஸ்ஸானது, தேநீர்க் கடையொன்றுக்கு எதிரில் தரித்து நின்ற வேளை, கடைக்குச் செல்லவதற்கென பாதையைக் கடக்க முற்பட்ட போதே, இவ்விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தி வருகின்றனர். (செ-12)

# பொறுப்புக்கூறல்...

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பொறுப்புக் கூறல் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவித்த சில கருத்துக்களைக் கண்டித்து மேற்குறித்த பொது அமைப்புகளால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்ட அறிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வில் இலங்கை உட்பட ஏனைய நாடுகளின் ஏகோபித்த சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்ட ஜெனீவாப் பிரேரணையை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கமானது அன்று வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்கும் விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் (பி.பி.சி. சிங்கள சேவைக்கு வெளியிட்ட கருத்துக்களை சிவில் சமூக அமைப்புக்களும், செயற்பாட்டாளர்களுமான நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

உருவாக்கப்படவிருக்கும் நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளோ, வல்லுநர்களோ பங்குகொள்ள மாட்டாரகள் என ஜனாதிபதி சிறிசேன மேற்கண்ட செவ்வியில் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

அச் செவ்வியில் ஜனாதிபதி சிறிசேன, இலங்கையின் தற்போதைய நீதித் துறையிலும், விசாரணை கட்டமைப்புக்களிலும் தான் முழு நம்பக்கை வைத்திருப்பதாக மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தச் செவ்வியில் இலங்கைக்கு வெளிநாட்டு ஆதரவு தேவைப்படுமெனின் அவ்வாதரவு பொருளாதார அபிவிருத்திக்காகவே கோரப்படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் செவ்வியை தொடர்ந்து ஓரிரு நாட்களிலேயே ஜனாதிபதியின் செவ்வியினால் ஏற்பட்ட சேதத்தை தணிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை அரசாங்கமானது ஜெனீவாவில் வழங்கிய வாக்குறு திகளுக்கு கட்டுப்பட்டே செயற்படும் என சனல் 4 பேட்டியொன்றில் தெரவித்தார்.

நீதி மற்றும் சட்டத்துறைகளின் மௌனமானது அந்த கட்டமைப்புகள் மீது எவ்விதத்திலும் நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை. மேலும, இவ்வாறான பல்லாயிரக் கணக்கான வழக்குகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தேங்கி நிற்பதோடு, ஒரு சில வழக்குகளில் மாத்திரமே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டும் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டும் உள்ளன.

ஆகையினாலே, இழைக்கப் பட்ட குற்றங்களுக்காக வழக்குத் தொடரல் உள்ளடங்கலாக நிலைமாற்று நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு வல்லுநர்களின் பங்குபற்றலை உறுதி செயதல், இப்பொறி முறை மீது மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டோரின் நம்பிக்கையை வென்றெடுக்க முக்கிய காரணியாக அமையும். மேலும், இந்த நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு வல்லுநர்களின் பங்குபற்றலானது திறன், நிபுணத்துவம் சார்ந்தது மட்டுமன்றி அதற்கும் அப்பால் பாதிக்கப்பட்டோரின் நம்பிக்கைய்யை பெற்றுக் கொள்வதில் அரசாங்கத்திற்கு இருக்கும் அரசியல் விருப்பு தொடர்பிலானதும் என்பதனை புரிந்து கொள்ளுதல் முக்கியமானது.

நீதிப் பொறிமுறையில் வெளி நாட்டு நீதிபதிகளையும், சட்ட வல்லுநர்களையும் உள்ளடக்க 2015 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கை அரசாங்கம் சம்மதித்த போது பொறுப்புக்கூறல் தொடர்பாக இவ்வரசாங்கம் தீர்க்கமாக செயற்படும் என்றே எண்ணத் தோனறியது.

அன்று அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து இன்று பின்வாங்குதல் பொறுப்புக்கூறல் தொடர்பாக செயற்படுவதற்கு இவ் வரசாங்கத்துக்கு இருக்கும் ஆர்வத்தை கேள்விக்குட்படுத்துகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

# சுதந்திர தினத்தை பகிஷ்...

இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தாங்கள் மேலும் சில தீரமாணங்களை மேற்கொணடுள்ளதாகவும் அருட்தந்தை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பிரதமர், காணாமல் போனவர்கள் இறந்து விட்டதாக தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிப்பதாகவும், அப்படி இறந்திருந்தால் இராணுவத்திடம் சரணடைந்த, ஒப்படைந்தவர்களுக்கு எனன நடந்தது? அவர்கள் எவ்வாறு இறந்தார்கள? மற்றும் முகாம்களிலும், வீடுகளிலும் வைத்து கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவ்வாறு அவர்கள் இறந்திருந் தால் அதற்கு காரணமானவர்கள் யார்? அதற்கான நடவடிக்கை என்ன? பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்ன? போன்ற பல்வேறு கேள்விகள் காணாமல் போனோரை தேடும் உறவுகள் மத்தியில் காணப்படுகிறது.

மேலும் காணாமல் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதாக சுகாதார அமைச்சர் றாஜித சேனாரத்தின அவர்களின் கருத்தையும் காணாமல் போனோரை தேடும் உறவினர்கள் அமைப்பு கண்டிக்கிறது.

காணாமல் போன உறவுகளுக்கு எந்த நீதியும் கிடைக்காது இவ்வாறான நடவடிக்கைகளை தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் இவ்வமைப்பு தீர்மானித்துள்ளதாக அருட்தந்தை செபமாலை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு மூன்றாவதாக பரணகம ஆணைக்குழுவின் கால நீடிப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அந்த ஆணைக்குழுவை உடனடியாக கலைந்துவிட்டு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பங்களிப்புடன் காணாமல் போனவர்களின் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் வட மாகாண காணாமல் போனோரை தேடும் உறவினர்கள் அமைப்பு தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவிணர்களின் அமைப்பைச் சேர்ந்த தலைவர், செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (செ-250)

# நிசாந்த விக்...

க்குழுவின் முன்னிலையில் ஆஜராகியுள்ளார்.

நிசாந்த விக்ரமசிங்க கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றையதினம் காலை 9.00 மணிக்கு விக்ரமசிங்க ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகியுள்ளார். விமான நிலையத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலேயே விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (செ-12)

# உள்.நீதிபதி...

நாட்டு தொழில்நுட்பம் மற்றும் உதவிகளை மட்டுமே பெறவுள்ளதாக, அமைச்சரவை பேச்சாளர் ராஜித்த சேனாரத்ன மீண்டும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு உதவி எனக் குறிப்பிடுவது, வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கேற்பு அல்ல என கூறிய அவர், அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உள்நாட்டு நீதிபதிகளின் உதவியுடன் மட்டுமே எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (செ-12)

# நீதிமன்றில் குழப்...

நீதிமன்றத்தை அவமதிப்பு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார்.

இந்த உத்தரவு வழங்கப்பட்ட கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்திற்கு எதிரிலும் உள்ளேயும் நுழைந்த பிக்குமார் உள்ளிட்ட சிலர் அங்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஹோமாகம நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

இதனடிப்படையில், சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-12)

# 68-வது சுதந்திரதின...

சுதந்திரதின நிகழ்வுகள் தொடர்பாக ஊடக நிறுவனங்களின் முக்கியஸ் தர்களுடான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் புதன் கிழமை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடை பெற்றது.

இதில் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவித்தாரன ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுதந்திரத்தின் இதயத்துடிப்பு என்ற தொனிப்பொருளில் 68-வது சுதந்திர தினம் இம்முறை கொண்டாடப்படவுள்ளது.

காலை நிகழ்வுகள் 8.45 மணிக்கு ஜனாதிபதியின் வருகையுடன் ஆரம்பமாகவிருப்பதால், இராணுவ அணிவகுப்புக்களை பார்வையிட விரும்பும் மக்கள் 8 மணிக்கு முன்னர் அதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு சமுகமளிக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பெப்ரவரி 4-ம் திகதி மாலை 7 மணி முதல் 10.30 மணிவரை கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இதில் கலந்துகொள்வதுடன், இதனைப் பார்வையிடும் மக்களை 7 மணிக்கு முன்னர் வருமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகள் தொலைக்காட்சிகள் ஊடாக நேரடி ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளன.

அதேநேரம், சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி மாதம் 1-ம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு வீடுகள், அலுவலகங்கள், பொது இடங்களில் தேசியக் கொடிகளைப் பறக்க விடுமாறும் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

அது மாத்திரமன்றி சுதந்திர தினத்தன்று மும்மத ஸ்தலங்களிலும் விசேட மத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# நான் இல்லாவிட்டால்...

யப்பட்டிருந்த தானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐம்பத்து எட்டு இலட்சம் மக்களின் அபிலாஷைகளின் பிரகாரம் புதிய கட்சியை உருவாக்க சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக கருத்து தெரிவித்துள்ள அவர், தற்போது எதிர்க்கட்சித் தலைவ்ராக உள்ள இரா.சம்பந்தன் இந்த அரசாங்கம் அமைய ஒத்துழைப்பு வழங்கியவர் என்பதால் அவரிடம் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தும் மக்களின் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை எதிர்பார்க்க முடியாது.

இதனால் புதிய கட்சி ஒன்றை உருவாக்குவதும் அதன் வாயிலாக புதிய தலைமைத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டியது காலத்தின் தேவை எனவும் கோத்தபாய தெரிவித்துள்ளார். (செ-12)

# ஐ.நா ஆணையாளரை...

மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 05-ம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரான செய்ட் அல் ஹுசேன் யுத்த குற்றங்களை விசாரணை செய்யவே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

தேசிய ஐக்கியத்தை சீர்குலைத்து இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கவே தேசிய அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்தவராவார்.

உலகளவில் மனித உரிமைகள் மீறப்படுவதும் கொடூர சமய சட்டதிட்டங்களை செயற்படுத்தும் நாட்டில் வாழ்ந்தவர்.

எமது நாட்டில் மனித உரிமை தொடர்பில் ஆராய முடியும் என்பது வேடிக்கையான விடயமாகும்.

மேலும் மக்களை ஏமாற்றி, நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களை காட்டிக்கொடுத்து அவர்களை தண்டிக்கவே தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் முயல்கின்றது.

எனவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (செ-12)

# டின்மீனுக்கு...

திரத்தை கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டின்மீன் இறக்குமதிக்காக செலவிடப்படும் 5 பில்லியன் ரூபாயை மீதப்படுத்தும் நோக்கில் இந்த உற்பத்தியை மேம்படுத்தும் திட்டமானது 2012ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன், 2013ஆம் ஆண்டு டின்மீன் கிலோ ஒன்றின் இறக்குமதிக்காக 100 ரூபாய் அறவிடப்பட்ட நிலையில் 2014ஆம் ஆண்டில் இதன தொகை 50 ரூபாயால் அதிகரிக்கப் பட்டிருந்தது.

மேலும், 280 கிராம் டின் மீனின் விலை 140 ரூபாய் அதிகபட்ச சில்லறை விலைக்கும், 155 கிராம் டின்மீனின் விலை 70 ரூபாய் என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த வேளை இதன் பலனை நுகர்வோர் பெறவில்லை.

அத்துடன், 2015ஆம் ஆண்டில் 40,000 மெட்றிக் தொன் டின்மீன் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், குறித்த இறக்குமதிக்காக 10 பில்லியன் செலவும் ஏற்பட்டதாகும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நுகர்வோருக்கான சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட வரி விலக்கினை தேசிய மெக்கரல் நிறுவனத்திற்கு மாத்திரம் வழங்குவதற்கு, மீன்பிடி மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (செ-12)

# துப்பாக்கியை...

கைத் துப்பாக்கியை வைத்து மிரட்டினாலும் நான் வழங்கிய தீர்ப்பில் மாற்றம் செய்ய மாட்டேன். அதனால் ஞானசார தேரருக்கு பிணை வழங்க முடியாது.

நான் தவறு செய்திருந்தால் மேலதிகாரிகளிடம் தெரிவிக்கலாம். ஏனெனில் நான் தவறு செய்யவில்லை. பிணை வழங்க போதுமான விடயங்கள் இந்த மனுவில் உள்ளடக்கப்படவில்லை.

அத்துடன் இந்த வழக்கை நான தொடர்ந்தும் விசாரிக்க விரும்பவில்லை. இது குறித்து சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளேன். பெரும்பாலும் அடுத்த வழக்குத் தவணைக்கு வேறொரு நீதிபதியே இந்த வழக்கை விசாரிப்பார் என்றும் நீதிபதி ரங்க திசாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-12)

# சிக்கா வைரஸ்...

டுக்கு அது தொடர்பில் எந்த அச்சுறுத்தலும் ஏற் படவில்லை எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மான ங்களை அறிவிக்கும் ஊடவியலாளர் சந்திப் பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்குள் வருபவர்களை பரிசோதிக்க உறுதியான கண்காணிப்பு அமைப்பு நிறு வப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இரு ந்து வருபவர்கள் அவதானிக்கப்படுவ தாகவும் அவர் சுட்டி க்காட்டியுள்ளார்.

சிக்கா என்ற வைரஸ் தற்போது வெளிநாடுகளில் பரவி வருகிறது. 1947-ம் ஆண்டு உகாண்டாவில் உள்ள 'சிக்கா' என்ற காட்டில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டதால் அதற்கு இந்தப் பெயர் வழங்கப்பட்டது.

ஆபிரிக்க, ஆசிய கண்டத்தில் பரவிய இந்த வைரஸ் 2007-ம் ஆண்டு மேற்கு பசிபிக் பெருங்கடல் அருகில் உள்ள 'யாப்' என்ற தீவில 75 சதவீதம் பேரை தாக்கியது.

அதனால் தொடர்ந்து 2015-ம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் இந்த வைரஸ் இருந்து வருகிறது. இலத்தீன் அமெரிக்கா வில் பிரேசில், பார்படோஸ் உள்ளிட்ட 20 நாடு களில் 'சிக்கா' வைரஸ் பரவி உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரி வித்துள்ளது.(செ-12)


## போட்டிப் பரீட்சை வகுப்பு

Feb. 06ம் திகதி நடைபெறவுள்ள அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்.

**ஆரம்பம் 30/01/2016 12.00 P.M**

✹30 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்

021 222 8148
021 568 9477
077 84 69 721
077 31 44 762

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3588)

## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:- யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

**தொடர்புகளுக்கு : 0779157883**

(3432)

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

இலங்கை நிர்வாக சேவை தரம் III (SLAS)
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (SLEAS)

**போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள்**

**ஆரம்பம் 30/01/2016 (12 PM)**

T.P No :- 021 222 8148
021 568 9477
077 84 69 721
077 31 44 762

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3581)

## காணி விற்பனை

ஈச்சமோட்டை துரையப்பா ஒழுங்கையில் மூன்று நிலப்பரப்பைக் கொண்ட இரண்டு காணிகள் (மொத்தம் ஆறு (6) பரப்பு) விற்பனைக்குண்டு.

தரகர்கள் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு : 0777755175**

(3418)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அனைவருக்கும் இலவச கணனிக் கல்வி

Free Skill Development Center
இலவச திறன் விருத்தி மையம்
Little Aid
CHARITY NR 1129695
United Kingdom

கிளிநொச்சி மாவட்டத்தின் கணனிக்கல்வி விருத்திற்காக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் லிட்டில் ஏய்ட் நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தும்

**இலவச கணனி கற்கை நெறி**
**Diploma in Computer Application (DCP)**

(Information Technology, MS Word, MS Excel, MS Power Point, MS Access, Internet & Email)

இலவச கையேடுகள் மற்றும் விரிவான பாடத்திட்டம்
பயிற்சி காலம் - 5 மாதங்கள்
பிரித்தானியாவிலிருந்து சான்றிதழ்கள்

**2016 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகள்**

**ஆரம்பம் 31.01.2016**
ஞாயிறு காலை 10.30

இடம் : லிட்டில் ஏய்ட் இலவச திறன் விருத்தி மையம் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்
0773751638

(சி-343)

## UK, Australia, Canada...

எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர

**Student Visa**
With Work Permit & PR



**IELTS அவசியமில்லை**

வங்கிக்கடன் வசதி

VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION

SIKARAM
Any Visa to Any Country

மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk

Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

(சி-3589)


## தமிழ் மக்கள் பேரவை
## Tamil People's Council

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட

**அரசியல் தீர்வுத் திட்ட முன்வரைபு**

(Report of the Sub-Committee on Finding a Political Solution to the Natioal Question)

**பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடும் ஆரம்ப நிகழ்வு**

தலைமை:
மாண்புமிகு நீதியரசர்
**சி.வி.விக்னேஸ்வரன்**
(வடக்கு மாகாண முதலமைச்சர்,
இணைத் தலைவர் – தமிழ் மக்கள் பேரவை)

**இடம்:** கைலாசபதி கலையரங்கம் யாழ்.பல்கலைக்கழகம்
**காலம்:** 31.01.2016 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:** பிற்பகல் 3.00 மணி

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஏற்பாட்டுக் குழு, தமிழ் மக்கள் பேரவை


# கலையை தொழிலாக மாற்ற விரும்பும் அனைத்து தரப்பினருக்கும் ஓர் அரியவாய்ப்பு

உள்ளூர் படைப்பாளிகளின் படைப்பை உலகளாவிய ரீதியில் எடுத்துச்செல்வதற்கும் சர்வதேச தொலைக்காட்சி ஒன்றின் பிரமாண்டமான மெகா தொடர் ஒன்றுக்கும் முழு நேரமாகவும் பகுதி நேரமாகவும் கலையை தொழிலாக மாற்ற விரும்பும் அனைத்து தரப்பினருக்குமான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

**திகதி :** நாளை சனிக்கிழமை (30.01.2016), ஞாயிற்றுக்கிழமை (31.01.2016)
**நேரம் :** காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை
**இடம் :** ஐ.பி.ஜி கிரிஜேசன் ( IBG creation ) கோண்டாவில் மேற்கு, இருபாலை வீதி, உப்புமட பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில்



**கலைத்துறையில் ஆர்வத்துடன் உலகம் முழுவதும் தொலைக்காட்சி துறையில் விஸ்வரூபம் எடுக்க விரும்பும்**

நடிகர்கள், நடிகைகள், நகைச்சுவை நடிகர்கள், கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம், ஒப்பனை, தனிக்குரல்நடிப்பு, குரல்கொடுத்தல், கமெரா இயக்குநர்கள், பேச்சாளர்கள், வசனகர்த்தாக்கள்

என தொலைக்காட்சியுடன் சம்பந்தப்பட்ட கற்பனை வளம் உள்ள அனைத்து தரப்பினரும் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்க முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு - 021 221 7901**
**Web site - www.ibceylon.com**
**Email - ib@ibceylon.com**

(C-3590)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.